உத்தம தோழன்.

மூத்திரசம்பந்தமான வியாதிகளால் அவதிப்பட்ட ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு குணமென்னும் பாக்கியத்தைக் கொடுத்து பேரும் புகழும் பெற்ற உத்தம தோழன் யாதென்று உங்களுக்குத் தெரியுமா?

அதுவே எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு, முதலிய வியாதிகளை நாஸ்தமாகக் கண்டிக்கும்.

[32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1]

இனம்! "போஜன விதி" இனம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, சென்னை.

நாமே உயிர்த்தோழர்கள்

20 நாளைக்கு ஒரு ரூபாய் பெற்று தினம் இரண்டு வேளை உம்முடைய வியாதிகளை அப்புறப்படுத்தி உம்முடைய வாழ்நாளை நன்னாட்களாய் கழியும் படி செய்ய

மதனசஞ்சரி டானிக்

என்னும் பெயருடன் உலாவும் தமையனும் வந்த வியாதிகளைத்தீர்க்கவும் வியாதிகள் வரவொட்டாமல் தடுக்கவும் வேண்டிய வழிகாட்டி

வைத்திய வித்தியா

என்னும் பெயருடன் இலவசமாய் கிடைக்கும் தம்பியுமேயாம். எழுதுங்கள்

மதனமஞ்சரி பார்மஸி
1/94, சீனு பஜார், மதருஸ்.

கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் 1.] 1931ஆ ஆகஸ்டு [இலக்கம் 11.

உலக வாழ்வு—பாரத தேசத்தின் ஸ்தானம்

III

இந்தியாவில் ஏராளமான உலோகங்கள் இருக்கின்றனவென்பது எல்லோராலும் சம்மதிக்கப்பட்ட ஒரு விஷயமாகும். பண்டைக் கால முதல் பாரதநாட்டிற்கு "ரத்ந கர்பம்" என்ற பெயர் விளங்கிவருவதே அக்காலங்களிலும், இக்காலத்திலும், அதன் பூமிக்குள் அளவற்ற ஐச்வர்யம் இருப்பதற்குப் போதுமான சான்றாகும். நமது இராஜ்பத்தில் தங்கம் வெட்டி எடுக்கும் எறும்புகள் இருப்பதாகச் சில கெட்டுக் கதைகள் புராதன காலங்களில் உலகமெங்கும் பரவியிருந்தன. அதை கேள்வியுற்ற கிரேக்கர்கள் நமது இராஜ்பத்தின் மேல் படையெடுத்து அலக்ஸாண்டரின் கீழ் வந்தனர். பழைய கதைகளை கூறுவதால் பயனில்லை என்று யாராவது இப்பொழுது கேட்பார்களானால், பூதத்வ ஆராய்ச்சி டயரக்டரின் அறிக்கையில் கண்டு வரும் உலோகங்களின் பட்டிகையை அவர்கள் பார்த்தால் போதும். இந்தியாவின் உலோக உற்பத்தியை 45 தலைப்பின் கீழ் அவர் அட்டவணை செய்திருக்கிறார். அவைகளில் பிரதானமானவை:—நிலக்கரி, பெட்ரோலியம, மாங்கனீஸ், ஈயம், ஈயமண், தங்கம், வெள்ளி, காக்காய்பொன், துத்தநாக மண், தகரம், தகரமண், இரும்புமண், செம்புமண், வைரம், டங்கஸ்டன் மண் ஸ்டீடைட், அஸ்பெஸ்டாஸ், அன்டிமணி, கொரண்டம், பெரைடீஸ்.

இவ்வளவு பெரிதான ஒரு பட்டிகையிலடங்கிய உலோகங்கள் இந்தியாவில் இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தும், இந்த ஆஸ்திகளை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய சிரத்தை ஒருவரும் 25 வருஷங்களுக்கு முன் எடுத்துக்கொள்ளவில்லை. தற்காலத்திலுள்ள நமது நிலைமையை நோக்குங்கால் இவ்விதம் உலோகங்களை அபிவிருத்தி செய்யாமலிருந்தது நமது நலத்திற்காகவேயிருக்கலாம் என்று சிலர் கூறுவார். இது ஆலோசிக்கவேண்டிய ஒரு விஷயமாகும். இவ்வித நோக்கமுடையவரும் நம் நாட்டில் இருக்கின்றார். சென்னையில் 1906-மஆ நடந்த கைத்

தொழில் மகாநாட்டின் அக்கிராசனர் இவ்விதம் கூறியுள்ளார். "இம்மாதிரி சந்தர்ப்பங்களில், பிரிட்டிஷ் அரசாட்சியின் கீழ் இந்திய புத்துயிர் பெற்று இந்திய கைத்தொழிலாளிகளே தங்கத்தையும், பெட்ரோலியத்தையும் பூமிக்கடியிலிருந்து எடுத்து அவைகளின் லாபத்தை அடையும் காலம் வரும் வரையில், இந்த உலோகங்கள் பூமிக்குள் இருப்பதால் நமக்கு நலமே விளையுமென்று நான் நம்புகிறேன்." மற்ற ஜனங்களின் நன்மைக்கு மாத்திரம் சாதகமாயிருக்கும் வரையில் உலோகங்களை எடுக்கும் விஷயத்தில் இம்மாதிரி கொள்கை நம்மிடத்தில் இருப்பது சரிதான். உதாரணமாக, மைசூர் தங்கம் வெட்டி எடுக்கும் தொழிலை சற்று ஆராய்வோம். இவ்விடத்தில் ஐரோப்பியர்கள் 1882-ம்௵ முதன் முதல் தங்கம் எடுக்க ஆரம்பித்தனர். அது முதல் 1921-ம் வருஷம் கடைசிவரையில் கோலார் தங்க நிலங்களிலிருந்து £ 5,68,90,000 விலை பெறுமான தங்கம் எடுக்கப்பட்டிருக்கின்றது. அக்கம்பெனிகளின் பங்காளிகளுக்கு லாபமாக 2 கோடிப் பவன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மைசூர் அரசாங்கத்தாருக்கு அரசிய கட்டணமாக கிடைத்திருப்பது 30 லக்ஷம் பவன் மாத்திரமே. இந்தத் தங்கம் எடுப்பதால் யார் லாபமடைந்தார்கள்? இந்தியாவைக் காட்டிலும், ஐரோப்பியக் கம்பெனிகளின் பங்காளிகளே பெருத்த லாபம் அடைந்திருக்கிறார்கள்.

இந்தியாவில் உற்பத்தி செய்யும் எல்லா உலோகங்களையும் விட மாங்கனீஸ் அதிகமாகவும், மொத்தத்தில் கூடுதல் விலை பெற்றதாகவுமிருக்கின்றது. இந்த உலோக உற்பத்தியை மிகவும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். மாங்கனீஸ் உற்பத்திசெய்யும் இராஜ்யங்களில் நாம் இரண்டாவது பதவியில் இருக்கின்றோம். 1927-ம் ௵ 11,29,353 டண்ணும் £ 28,44,237 விலைபெறுமானமும் ஆகிய மாங்கனீஸை நாம் உற்பத்தி செய்திருக்கிறோம். இதில் இங்கிலாந்திற்கு 2,11,401 டண்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1926-ம் வருஷத்தைவிட இது மூன்று தடவை அதிகமாகும். மாங்கனீஸ் உற்பத்தியிலும் அதை இதர நாடுகள் வாங்கிக்கொள்வதிலும் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதற்கு காரணமென்னவெனின், இரும்புக் கம்பெனிகளுக்கு இந்த உலோகம் மிக்க அவசியமாகும். இங்கிலாந்திலும் இதர நாடுகளிலுமுள்ள இரும்பு, எகிழ் கம்பெனிகளின் தேவையின் பொருட்டு நமது நாட்டில் ஏராளமான மாங்கனீஸை பூமியிலிருந்து வெட்டி எடுத்தனர். இதற்கு அனேக வருஷங்களாக லைஸன்ஸ் பெற்றவர்களும், உலோகமிருக்குமிடங்களை கண்டுபிடிக்கும் நிபுணர்களும் இவ்விடத்திற்கு வந்தார்கள். நமது இராஜ்யத்தில் இரும்பு எகிழ் கம்பெனிகள் இப்பொழுதுதான் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் டாட்டா கம்பெனி பிரதானமானது. இப்பொழுது இந்த கம்பெனிகள் நமது மாங்கனீஸில் ஒரு பாகத்தை உபயோகிக்கின்றன.

ஆதலால், நமது மாங்கனீஸ் உலோக சரித்திரத்திலிருந்தும் நமது இராஜ்யத்தை இதர தேசத்தார்கள் எவ்விதம் தமது நலத்திற்காகவே உபயோகித்திருக்கிறார்கள் என்பது விளங்குகின்றது. இதிலிருந்து பழைய கொள்கையுள்ளவர்கள் கூறியது, அதாவது "இந்தியர்களுக்கு கைத்தொழில்களை நடத்த சுதந்திரம் கிடைக்கும் நாள்வரை, இந்திய பூமிக்குள் இருக்கும் அரும்பெரும் வஸ்துக்கள் அவ்விடத்திலேயே இருக்கட்டும்" என்பது நியாயம் தான்.

பெட்ரோலியத்தின் கதையை கேட்கும் பொழுதும், தங்கம், மாங்கனீஸ் இவைகளின் கதைகளைப் போலவே அதுவும் இருக்கின்றது. இந்த எண்ணெ உற்பத்தி செய்யும் நாடுகளில் நாம் 11-வது நாடாகும். நமது இராஜ்யத்திலுள்ள பெட்ரோலியம் குறைந்து போகின்றதென்று கூறப்படுகின்றது. பூதத்வ ஆராய்சி டயரக்டரின் அபிப்பிராயத்தின்படி, இந்த உலோகம் நமது இராஜ்பத்திற்கு மிக்க இன்றிமையாததால், அதை அதிகமாக எடுப்பதைவிட கொஞ்சம் கொஞ்சமாக எடுப்பதே இராஜ்யத்திற்கு க்ஷேமத்தை கொடுக்குமாம். நிலக்கரியும், இரும்பும், எண்ணெயும் உலகத்தை ஆளுகின்றன. அவ்விதம் இருக்கும்பொழுது, எண்ணெ விஷயத்தில் மேல் கூறிய எச்சரிக்கை நமக்கு கிடைத்திருப்பதிலிருந்து, நமது தேசிய திட்டம் எவ்வளவு கவனமாகவும் புத்தியோடு கூடியதாகவும் இருக்கவேண்டுமென்பது புலப்படுகிறது. மேலும், இந்தியாவிலுள்ள எண்ணெ தொழில்கள் முற்றிலும் இந்தியர்கள் கையில் இருக்கவில்லை என்பதை நேயர்கள் கவனிக்க வேண்டும். பர்மா எண்ணெ கம்பெனியும், ஆசியாட்டிக் பெட்ரோலியம் கமபெனியும் பெட்ரோலியம் தொழிலைக் கையில் வைத்துக்கொண்டிருக்கின்றன.

மேல் கூறிய விஷயங்களிலிருந்து நமது உலோக உற்பத்தியில் நாம் அபிவிருத்தி அடையாமலிருப்பது நமது நலத்திற்காகவே என்று கூறினாலும், இவ்விதம் அபிவிருத்தி அடையாத நிலைமையில் நமது இராஜ்யம் இருப்பது அதன் பிற்போக்கையும் நமக்குவேண்டிய ஆயிரக்கணக்கான சாமான்கள் ஒவ்வொன்றிற்கும் இதர நாடுகளை நாம் நம்பி யிருப்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

சென்ற வியாசங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகளோடு நமது இராஜ்யத்தை நாம் ஒப்பிட்டுப் பார்த்தோமல்லவா? அந்த இராஜ்யத்தின் ஸ்திதியை சற்று கவனிப்போம். நிலக்கரி, பெட்ரோலியம், இரும்புமண், மோட்டா இரும்பு, செம்பு, துத்தநாகம், ஈயம், இவைகளின் உற்பத்தியில் பிரதம பதவியும்,வெள்ளி, தங்கம் இவைகளில் இரண்டாவது பதவியும் அதற்கிருக்கின்றன. இந்த உலோகங்களெல்லாம் அந்த இராஜ்யத்தி

லுள்ள கைத்தொழிலுகளுக்காகவே உபயோகிக்கப்படுகின்றன. ஐக்கிய நாடுகளிலிருந்து வெளிநாடுகளுக்கு எண்ணிறந்த வண்டிகளும் — போர்டுகாரும், செவர்லட் காரும் தெரியாத இந்தியன் யாராவது இருக்கிறனா?—இரும்பு இகழ் சாமான்களும், இதர உலோக சாமான்களும், துணிகளும், வேறு உடுதுணிகளும், சிகரட்போன்ற புகையிலைச்சாமான்களும், ரஸாயன வஸ்துக்களும், செயற்கைப் பட்டுகளும், காகிதங்களும் இன்னும் ஆயிரக்கணக்கான சாமான்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவைகளில் பெரும்பான்மையையும் நாம் போதுமளவு உற்பத்தி செய்யவில்லை. இச்சாமான்களில் அநேகத்தை நாம் இறக்குமதி செய்கின்றோம். இவைகளில் சிலவற்றை ஐக்கிய நாடுகளிலிருந்தும் தருவிக்கிறோம்.

நாம் இதற்குமுன் கூறியதுபோல், ஒரு தேசத்தில் கைத்தொழிலுக்கு வேண்டிய உலோகங்கள் இருக்கின்றனவென்று கூறவேண்டுமாகில், அவ்விடத்தில் நிலக்கரியும், இரும்பும், எண்ணையும் ஏராளமாகவிருக்கவேண்டும். தற்காலத்தில் ஜல சக்தியால் உற்பத்தி செய்யும் மின்சார சக்திக்கு நிலக்கரியையும் எண்ணையையும்விட பிரதான்யம் அதிகரித்து வருகின்றது. இதர உலோக உற்பத்தியைப்பற்றிய புள்ளி விவரங்களை பிரத்தியேகமாக நாம் ஆலோசிக்க வேண்டியதில்லை. இம் மூன்று உலோக விஷயங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகளோடு நமது நாட்டை ஒப்பிட்டு பார்த்தால் போதும்.

ஐக்கிய நாடுகளில் 51 7 கோடி டண் நிலக்கரி உற்பத்தி செய்யப்படுகின்றது. நமது இராஜ்யத்தில் இதில் 4%, அதாவது 22 கோடி மாத்திரம் தான் உற்பத்தி செய்யப்படுகின்றது. நாம் உற்பத்தி செய்யும் நிலக்கரி நமது ரயில் வண்டிகளுக்கும், நமது ஸிலோன், ஸ்டெரியிட்ஸ் ஸெட்டில் மெண்டுகள் சகோதரர்களுக்குமே கிடையாது. தற்காலத்தில் அநேக பருத்தித்துணி ஆலைகளும், மூன்று இரும்பு, இகழ் ஆலைகளும் நமது தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், நிலக்கரிக்குள்ள நமது தேவை அதிகரிக்கின்றது. இப்பொழுது வருஷாவருஷம் நாம் ரூ. 58 லக்ஷம் விலைபெறுமான 2,44,000 டண் நிலக்கரியை இறக்குமதி செய்கின்றோம். ஆதலால் நமது கைத்தொழிலை அதிகரிப்பதற்குமுன் நமது நிலக்கரி உற்பத்தியை விருத்திசெய்வது இன்றிமையாததாகும்.

எண்ணையைப்பற்றி கவனிப்போமாகில், ஐக்கிய நாடுகள் 12·9 கோடி டண்கள் உற்பத்திசெய்கின்றன. இந்தியாவோ 12 லக்ஷம் டண்களுக்குள்ளாகவே உற்பத்தி செய்கின்றது. சாதாரண உபயோகத்திற்காக பேர்ஸியாவிலிருந்தும், போர்னியோவிலிருந்தும் நாம் 10 கோடி காலன் எண்ணை இறக்குமதி செய்கின்றோம். நமது நாட்டில் மோட்டார் பிரயாணம் எவ்வளவு அதிகரித்திருக்கிறதென்பது நமது நண்பர்களுக்குத்

தெரிந்திருக்கும். இதற்காகவே இராஜ்பத்தில் இறக்குமதியாகும் பெட்ரோலியத்தில் சில பாகம் உபயோகிக்கப் படுகின்றது. இந்த மோட்டார் பிரயாணத்தில் அபிவிருத்தி வந்திருப்பது நமது இராஜ்பத்தின் பொருளாதார நலத்திற்கென்று கூறமுடியாது. ஏனெனின், தற்காலம் மோட்டார் வண்டிகள் சுகத்திற்கு மாத்திரமே அதிகமாக உபயோகிக்கப்படுகின்றன. நமது இராஜ்பத்தில் உற்பத்திசெய்வதும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதுமாகிய பெட்ரோலியத்தையும், வெளிநாடுகளிலிருந்து மட்டுமே இறக்குமதியாகின்ற மோட்டார் வண்டிகளையும் கொண்டு நமது கைத்தொழில்களை—குறைந்தது விவசாயத்தையாவது—அபிவிருத்தி செய்யும் நாள்வரை, நமது பெட்ரோல் சொத்தை சரியானபடி இராஜ்யத்தின் நலத்திற்காக நாம் உபயோகிக்கிறோம் என்று கூறமுடியாது.

இரும்பு உற்பத்தியை ஆராய்வோமானால், நாகரீகமடைந்ததும், முன்னேற்றமடைந்ததுமாகிய இராஜ்பங்களின் கடைசியில் நமது இராஜ்யம் இருக்கின்றதென்பது புலப்படும். எல்லா கைத்தொழில்களுக்கும் இரும்பும் இகழும் ஆதாரமாகும். ஆதலால் எத்தேசத்திற்கு இரும்பு அதிகமில்லையோ அத்தேசம் கைத்தொழிலுக்கு பிரதானமாகவேண்டிய ஒரு சாமானத்தின் குறைவால் கஷ்டப்படவேண்டியதே. டாட்டா கம்பெனியின் புண்ணியத்தால் சென்ற சில வருஷங்களாக இரும்பும் இகழும் என்ற வார்த்தைகளை கேட்க நாமும் பாக்கியம பெற்றிருக்கிறோம். ஆனால் டாட்டா கம்பெனி ஒன்று மாத்திரத்தால் எல்லாம் சாதித்துவிட முடியுமா? இப்புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பாருங்கள். நமது நாடு எவ்வளவு பிற்போக்காக விருக்கிறதென்பது புலப்படவில்லையா? நாம் உற்பத்தி செய்யும் மோட்டா இரும்போ 11,40,057 டண் தான். அதில் ஏறக்குறைய பாதி டாட்டா கம்பெனியாரால் செய்யப்படுகின்றது. இகழ் உற்பத்தியை கவனிக்கவேண்டியதே இல்லை. அது அவ்வளவு குறைவானது. டாட்டா கம்பெனி 4,14,738 டண்கள் உற்பத்தி செய்கின்றன. ஐக்கிய நாடுகளோ 6·27 கோடி டண் இரும்புமண்ணும், 3·86 கோடி டண்கள் மோட்டா இரும்பும் அதற்குப் போதுமான இகழும் உற்பத்தி செய்கின்றன. இப்புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பாருங்கள். நமது நாடு எவ்வளவு பிற்போக்காக இருக்கிறதென்பது புலப்படவில்லையா? இதிலிருந்து கைத்தொழில் அபிவிருத்தியை நாம் எட்டிக்கூட பார்க்கவில்லையென்றே சொல்லலாம். இவ்வளவு காலம் தூங்கிவிட்டதற்கு பரிகாரமாகவும், ஐக்கிய நாடுகள் போன்ற இதர இராஜ்பங்களோடு போட்டிபோடாவிட்டாலும், அவர்களுக்கு சமமாக இருப்பதற்காகவும் நாம் என்ன செய்யவேண்டுமென்பதை எல்லோரும் இனிமேல் ஆராயவேண்டும். இதற்கு இந்திய மக்களனைவர்க்கும் உலக அறிவு ஊட்டுவதும், நமது தேசப்பிரமுகர்கள் அபிவிருத்தி வேலைகளில் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் ஈடுபடுவதும் இன்றிமையாததாகும். தற்காலம் ஈசனருளால் தேசிய உணர்ச்சி நாடெங்கும் பரவியிருப்பதை பின்பற்றி எல்லோரும் யத்தனிப்பார்களென்றும் மேற் கூறிய நமது ஆசி சித்தி பெறுமென்றும நாம் நம்புகிறோம்.

பத்திராதிபரின் குறிப்புகள்

நமது தேசம் நெருக்கடியான ஒரு ஸ்திதியை தற்காலம் அடைந்திருக்கின்றது. இதை எல்லாவித ஜீவிதங்களிலும் நாம் காண்கிறோம்.

கள்ளுக்கடைகளும், விற்பனைகளும், மதுவிலக்கு இயக்கமும்.

கள்ளுக்கடை வருமானம் குறைந்துகொண்டே போகின்றது. சொற்ப காலங்களாக நடக்கும் சில பிரதான சம்பவங்களால் அபிவிருத்தி யடைந்திருக்கும் தேசீயக் கிளர்ச்சியும், சன்மார்க்க புத்தியின் உணர்ச்சியும், இதற்குக் காரணங்களாகுமென்று நாம் சம்மதிக்கின்றோம். இராஜ்யமெங்கும் கள்ளுக்கடை மறியல் மிகவும் தீவிரமாக நடத்துவதும் இதற்குக் காரணமாகும். ஆனால் கள்ளுக்கடைக்காரன் ஏலம் கூப்பிட வருவதற்கு சற்றும் மனமில்லாமலிருப்பதற்கு இவை மாத்திரம் காரணங்களாகா. அவனை ஏலம் கூப்பிட வற்புறுத்தினால், சென்ற வருஷம் ஒருகடையை 100 ரூபாய்க்கு ஏலம் எடுத்திருந்தால் அக்கடைக்கு இவ்வருஷம் 20 ரூபாயோ, அல்லது அதிலும் குறைந்தோதான் அவன் கொடுக்க சித்தமாயிருக்கிறான். தற்கால நிலைமையை நன்குணர்ந்த அவன் தனக்குச் சகாயமாக கள்ளுக்கடை கிடைக்கும் என்று எண்ணுவது உண்மையே. எனினும், ஜனங்களிடத்தில் பண வறுமை பெருகியிருப்பதையும், குடிக்க அவர்களிடம் பணமில்லை என்பதையும் அவன் நன்றாக அறிந்திருக்கிறான். அரசாங்கத்தாரும் இதை அறிய வேண்டும். அவர்களுடைய வருமானத்தையும் கலால் திட்டத்தையும் காலத்திற்கேற்றபடி மாற்றிக்கொள்ளவேண்டும். கலால் வருமானம் பழைய ஸ்திதியிலிருக்குமென்ற வீணாசையை அறவே அவர் ஒழித்திடவேண்டும். மதுவிலக்கு முறைகளில் சிலவற்றையாவது கையாளுவதற்குள்ள காலம் நெருங்கிவிட்டது. சென்னை கவர்னரும் அவர் மனைவியாரும் சொற்ப தினங்களுக்கு முன் ஒரு விசித்திரமான சந்தர்ப்பத்தில் அகப்பட்டுக்கொண்டனர். பெத்தவடுகூரைச் சேர்ந்த ஸ்ரீ சின்னராபு ரெட்டி ஒரு வரம் வேண்டுமென்று அவர்களிடம் கேட்டுக்கொண்டார். வரத்தின் சாரமென்னவெனின், அநந்தப்பூர் ஜில்லாவிலுள்ள தரிமேல என்ற பிரதேசத்தில் மதுவிலக்கு செய்யவேண்டுமென்பதேயாம். இந்த ஸ்தலத்தின் பொருளாதார நிலைமையை கவனிக்குமளவில் நமது மாகாணத்திலுள்ள எல்லா ஸ்தலங்களையும் விட அவ்விடத்திலேயே வறுமை குடிகொண்டிருக்கிறதென்று கூறலாம். 4 வருஷங்களில் ஒருதடவை அவ்விடத்தில் க்ஷாமம் வருகின்றது. இதர மூன்று வருஷங்களிலும் சாமான்கள் கிடைக்காதத் திண்டாட்டம். இந்த சீர்கெட்ட ஸ்திதியின் கொடுமையைக் கண்ணுற்ற அவ்விடத்து ஜனங்கள் தாமாகவே குடியை நிறுத்த முயலுகிறார்கள். பட்டினியால் எல்லும் தோலும் மாத்திரத்தோடிருக்கும் இஜ் ஜனங்களிடையில் இனிமேலுமா கள்ளும் இதர லாஹிரி வஸ்துக்களும் நடமாடவேண்டியது? இவர்கள் ஜீவித்திருப்பதுதான் அவர்களுக்கு உண்பதற்குள்ள வசதியாலல்ல, ஆவியின் பாலுள்ள ஆசையினால் மட்டுமே என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. நமது மாகாணத்தில் தரிமேலாவைப்போன்ற இன்னும் அநேக ஸ்தலங்களிருக்கலாம். உதாரணமாக, சேலம் ஜில்லாவைச் சார்ந்த ராசிபுரம் தாலுகாவை எடுத்துக்கொண்டால் போதும். தற்கால பொருளாதார கஷ்டத்தைக் கவனித்து இப்பொழுது ஒன்றிரண்டு ஜில்லாக்களிலாவது மதுவிலக்கை கவர்ன்மெண்டார் ஆரம்பித்து அந்த மஹத்தான இயக்கத்திற்கு ஆதரவளிப்பார்களா அல்லது, வெகு வருஷங்களாக ஒரு தீங்கு முறையைக் கையாளுவதால் ராஜ்ய

மெங்கும் பரவிக்கிடக்கின்ற தமது ஆயிரக்கணக்கான சிப்பந்திகளின் உதவியோடு ஏழைக் குடியனைக் கசக்கிப்பிழிந்து அவன் கையிலுள்ள பணத்தை வசூலிப்பார்களா ? அரசாங்கத்தார் என்னசெய்தாலும் அல்லது செய்யாவிட்டாலும், சீர்திருத்த வேலையில் ஈடுபட்டிருப்பவரின் கடமை இன்னவேன்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இப்பொழுதுள்ள குடி நிறுத்த இயக்கத்தை வெகு தீவிரமாக நடத்தி ராஜ்யத்திலிருந்து குடியை அறவே அகற்றிடவேண்டும். கள்ளுக்கடை மறியலால் மட்டும் விசேஷபலன் ஏற்படாது. குடிகாரனின் மனதை சூழ்ந்து ஆராயுங்கால், அவன் உள்ளம் நல்லதென்று நமக்குப் புலப்படும். இதற்கு அத்தாட்சியாக ஒரு காரியத்தைக் கவனியுங்கள்; சாதுக்களும் சத்சுபாவமுள்ளவர்களும் கள்ளுக்கடை மறியல் செய்யுங்கால் குடிகாரன் அவர்களை உற்றுப்பார்க்கும்பொழுதே அக்கள்ளுக் கடையில் ஏறுவதற்கு அஞ்சுகிறான். ஆனால் ஒன்று மாத்திரம் நாம் கவனிக்க வேண்டும். சில ஜனங்கள் குடிப்பதால் தாம் லாபமடையலாமென்ற எண்ணமுள்ளவர்கள் இருப்பார்களானாலும், எல்லா ஸ்தலங்களிலும் பல வழிகளிலும் அவர்கள் கள் கொடுப்பார்களானாலும், குடிகாரன் குடிப்பது இயற்கையே. அதுபற்றி அவனைக் குறை கூறுவது சரியன்று. குடிவெறியனுக்கு முன் கள்ளை நீட்டினால் என்ன விலை கொடுத்தாவது குடிக்கப் பார்ப்பது அவன் சுபாவமன்றோ ? ஆகலால் நாம் ஊக்கத்துடனும் தீவிரமாகவும் வேலை செய்யவேண்டும். ஒவ்வொரு தெருக்களிலும், உத்தியோகப் பற்றற்ற ஸ்தாபனங்கள் எல்லாம் தமது இன்ஸ்பெக்டர்களை நிறுத்தவேண்டும். ஒவ்வொரு குடிகாரனுடைய ஜீவிதத்தைக் குறித்த விவரமாக சரித்திரம் அவர்கள் சித்தம் செய்யவேண்டும். அவன் எவ்விடத்தில் குடிக்கிறான், என்னது குடிக்கிறான், யாரெல்லாம் அவன் சினேகிதர்களும் தோழர்களும் ஆவார்கள் என்பதை அவர்கள் பிரத்தியேகம் கவனிக்கவேண்டும். அவனுடைய மனைவி மக்கள்களின் அன்பாலும், அவன் சிநேகிதர்களுடைய சகாயத்தாலும், அவனுடைய எஜமானின் உதவியாலும் இன்னும் பலமுறைகளாலும் அவனைச் சீர்திருத்த அவர்கள் சிரமிக்கவேண்டும். மதுவிலக்குச் சட்டம் ஒன்று ஏற்படுத்தினாலும், அதை சரிவர நடந்தவேண்டுமானால் கள்ளத்தனமாகக் கள் உற்பத்தி செய்வதையும், குடிப்பதையும் தடுக்கவேண்டும். ஆகலால் நாம் தூக்கத்தைவிட்டெழுந்து உற்சாகத்தோடு வேலைசெய்ய முன்வரவேண்டும். இவ்விஷயத்தில் இனிமேல் ஒருபொழுதும் நாம் அசட்டையாகவிருக்கக்கூடாது. ஒவ்வொரு கிராமத்திலும், பட்டணத்திலும் இதற்காக தனிஸ்தாபனங்களிருக்கவேண்டும். உற்சாகமுள்ள பஞ்சாயத்தார்கள் வேலை ஒன்றுமில்லை என்று இனியேல் தவிக்கவே வேண்டியதில்லை. மதுவிலக்கு இயக்கம் அவர்களுக்கு வேண்டுமளவு வேலை கொடுக்கும். அவர்கள் இவ்வித வேலைக்கு முன்வருவார்களாக.

கிருஷ்ணாவிலும், இரண்டு கோதாவரிகளிலும் ரீ-ஸெட்டில்மெண்டு.

கிருஷ்ணா ஜில்லாவிலும் இரண்டு கோதாவரி ஜில்லாக்களிலும் ரீ-செட்டில்மெண்டு செய்தபொழுது அரசாங்கத்தார் நிலவரியை அதிகப்படுத்தி யிருப்பதைப்பற்றி அநேகர் பலமாகக் கண்டிருக்கிறார். ஜனங்களின் உண்மையான பொருளாதாரஸ்திதியைக் கவனிக்காது, ஸெட்டில்மெண்டு ஆபீசர் தமதுயாதாஸ்தை தயாரித்தார் என்ற பெரும் குறையை நீக்குவதற்காகவே கவர்ன்மெண்டார் ஆரோக்கியசாமி கமிட்டியை நியமித்தார். அக்கமிட்டியார் தமது வேலையை சரிவரச் செய்த பிறகு, ஸெட்டில்மெண்ட் ஆபீ

சரின் நிலவரியை அதிகப்படுத்துவதற்குள்ள முறைகளை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளக் கூடாதென்று சிபார்சுசெய்தனர். அதன்மேல் அக் கமிட்டியின் அறிக்கையை அந்த ஸெட்டில்மெண்டு ஆபீசரைக்கொண்டே பரிசீலனை செய்ய அரசாங்கத்தார் ஆக்ஞாபித்தார். அதாவது, எந்த உத்தியோகஸ்தரின் வேலை சரியோ சரியல்லவோவென்று ஆராய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட கமிட்டியின் யாதாஸ்தை விசாரணை செய்வதற்கும் அதைப்பற்றி கடைசி அபிப்பிராயம் கூறுவதற்குமுள்ள அதிகாரத்தை அதே உத்தியோகஸ்தருக்கு அரசாங்கத்தார் கொடுத்தார்கள். வெகு பிரயாசப்பட்டு கமிட்டியாரால் கட்டப்பட்ட கட்டிடத்தை அழிப்பதற்கு அந்த ஆபீசர் முயன்றிருக்கிறார் என்பது புலப்படுகிறது. ரிவினியூ போர்டாரும் இதற்கு ஒத்துப்பாடுகின்றனர். கமிட்டியின் யாதாஸ்தை அந்த ஆபீசர் மிகவும் ஆழ்ந்து ஆலோசித்திருப்பதால், கமிட்டியின் யாதாஸ்தில் எந்தெந்த பாகங்களை எல்லாம் அந்த ஆபீசர் பரிசீலனை செய்திருக்கிறாரோ அந்த பாகங்களை தாம் இன்னும் விரிவாக ஆலோசிக்கவேண்டியதில்லை என்று அவர் கூறுகிறார். அதாவது, அந்த ஆபீசர் கூறுவதை எல்லாம் ரவினியூ போர்டார் ஒப்புக்கொள்கிறார் என்பதே இதன் கருத்து. போர்டார் இதோடு நின்றுவிடவில்லை. கமிட்டியாருக்கு ரீ-ஸெட்டில்மெண்டு விஷயமாகவும், தனசாஸ்திர விஷயமாகவும் சில ஆரம்ப தத்வங்களையும் அவர்கள் கற்றுக்கொடுக்கின்றனர். ரவினியூ போர்டாரின் ஆலோசனை வழிகளை முற்றிலும் இவ்விடத்தில் ஆராயவேண்டிய அவசியமில்லை. சுருக்கமாகக் கூறுமளவில் போர்டின் முடிவு தீர்மானம் என்னவென்றால் அந்த ஆபீசருடைய அறிக்கையில் அதிகப்படுத்தியிருக்கும் நிலவரி விகிதத்தை இந்த ஜில்லாக்களிலுள்ள விவசாயிகளால் பொறுக்கமுடியாதென்று கமிட்டியாரால் கூறமுடியவில்லை என்பதாகும். ரவினியூ போர்டார் கூறுவதாவது: "சென்ற ஸெட்டில்மெண்டு சமயத்திற்கும் இப்பொழுதுமுள்ள இடைக்காலத்தில் அரிசியின் விலை 100% அதிகமாயிருப்பதால் தற்பொழுது உத்தேசித்திருக்கும் ரேட்டைக் காட்டிலும் கூடுதல் ரேட்டை நிலங்களிலிருந்து வசூலிக்கலாம். அதில் யாதொரு அந்நியாயவுமில்லை.' இந்த "பலமான" கொள்கையோடு அரசாங்கத்தார் புது ரேட்டை கொண்டுவந்திருக்கிறார்கள். போர்டாரின் பரிசீலனையில் ஒருபாகத்தை நாம் கவனிப்போமாகில், அவர்களின் கொள்கைக்கும் ஜனாபிப்பிராயத்திற்கும் பெருத்த வித்தியாசமிருப்பதைக் காணலாம். அந்த பாகமாவது :—

"நிலவரி விதிக்கும்போது நிலத்தில் சாகுபடிசெய்யும் பொருளின் பரிமாணத்தைக் கவனிக்காது, நிலத்தை வைத்துக்கொண்டிருக்கும் மனிதனின் பொருளாதார நிலைமையையே கவனிக்கவேண்டும் என்ற தப்பிதமான அடிப்படை கொள்கையோடு கூடியே கமிட்டியார் தமது வேலையை ஆரம்பித்திருக்கின்றனர். ஆதலால் "விவசாயியின் நலத்தை கருதவேண்டிய அவசியமில்லை என்ற கொள்கையை அரசாங்கத்தார் ஒருக்காலும் ஒப்புக்கொள்ள மாட்டார்களென்று நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம்" என்று கமிட்டியார் கூறுகின்றார். கமிட்டியின் கொள்கை சாஸ்திரீகமாக சரியாகவிருந்தாலும், அதை நடப்பில் கொண்டுவருவது அசாத்தியமென்பது எல்லோரும் நன்கு அறியவேண்டும்."

அரசாங்கத்தார் கமிட்டியின் கொள்கையை எவ்விதம் குறை கூறியிருக்கின்றார்களோ அதே மாதிரியாகவே ஜனங்களுடைய கட்சியினரும் அரசாங்கத்தாரின்

கொள்கையை குறை கூறலாம். கீழ்கண்ட விதம் கூறுவது மிகையாது. "ஜனங்களின் ஜீவித மார்க்கங்கள் அபிவிருத்தியடைவதையும், உதவி கைத்தொழில்கள் இல்லாமல் போவதையும், நிலத்தில் உபயோகப்படுத்தும் மூலதனத்திற்கும், வேலைக்கும் நாளுக்கு நாள் குறைந்த அளவு பலன் கிடைப்பதையும் எள்ளளவும் கவனியாது நிலத்தில் சாகுபடி செய்யும் பொருளின் தப்பிதமான சராசரி அளவொன்றையே கவனித்து நிலத்தின்மேல் கிஸ்து வசூலிக்கலாமென்ற மூட அபிப்பிராயத்தை ரிவினியூ போர்டார் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆதலால் அவர்களின் அறிக்கையில் கண்டுவரும் ஆலோசனைகளும் அபிப்பிராயங்களும் இந்தக் குறையோடு கூடியிருக்கின்றன. சென்ற செட்டில்மெண்டு வருஷத்திற்கும் இவ்வருஷத்திற்குமிடையில் அரிசியின் விலை 100% அதிகமாயிருப்பதால், தற்காலம் உத்தேசித்திருக்கும் கூடுதல் நிலவரி விகிதத்தைக் காட்டிலும், இன்னும் கூடுதல் விகிதம் வசூலிப்பதில் தப்பிதமில்லையென்ற முடிவு தீர்மானத்தை அவர் கூறும்பொழுது, போர்டாரின் கொள்கை சாஸ்திரீகமாக எவ்வளவு சரியானாலும், நடப்பில் கொண்டுவந்தால் அது ஒரு கட்சியினரின் நலத்தையே கவனிக்கின்றதென்பதையும், Mr. ஹோல்டேரன்ஸ் எவ்வித புள்ளி விவரங்களும் தர்க்கங்களும் கொண்டுவந்தாலும் கவர்ன்மெண்டாருக்கு ஜனங்களின் உண்மை ஸ்திதியை அறிவதற்கு சற்றும் சாதகமாகாதென்பதையும் நன்கு விளக்கும்". கமிட்டியாரின் நோக்கங்களை போர்டார் மாற்றிக் கூறியிருப்பதும், ரீ செட்டில்மெண்டு செய்வது தனித்தனி விவசாயியோடு செய்ய வேண்டுமென்று கமிட்டியார் கூறுவதாக எண்ணி அவர்களை ஆக்ஷேபிப்பதும், தமது ரீ-செட்டில்மெண்டில் ஜனங்களின் பொருளாதார ஸ்திதியை சற்றும் கவனியாமலிருப்பதும் மிகவும் விந்தையாகவே இருக்கின்றன. ஸ்தல சட்ட சபையில் இவ்விஷயத்தைப்பற்றி ஒரு அட்ஜோர்ன்மெண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை கவர்ன்மெண்டார் கவனிப்பாராக. கவர்ன்மெண்டார் இப்பொழுது கையாளும் தப்பிதமான முறையை கண்டிக்க ஜனாபிப்பிராயம் பலமான முயற்சிகள் செய்யுமுன்னதாகவே அதிகாரிகள் தாம் இழைத்துள்ள தவறை திருத்திக்கொள்வாராக.

கிராம அபிவிருத்திநிதி.

கிராம அபிவிருத்திநிதியைப்பற்றிய அரசாங்கத்தாரின் அறிக்கையை (instructions) இப்பத்திரிகையில் வேறோரிடத்து நாம் பிரசுரித்துளோம். இப்பொழுது இந்த நிதிக்கு பிரத்தியேக பணமொன்றும் தாம் கொடுக்கப்போவதில்லை என்று அவர் கூறியிருக்கிறார். இதைக்குறித்து நாம் மிகவும் விசனப்படுகிறோம். அவர்களின அறிக்கையின் குணகுணங்களை வரும் இதழில் நாம் ஆராய்வோம். இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் உதவிப்பணம் எவ்விதம் பாகிக்கப்படுகின்றதென்பதை நமது நண்பர்களுக்கு எளிதில் புலப்படுவதற்காக, சென்னை சட்டசபையில் நமது பிரதான மந்திரி செய்த பிரசங்கத்தின் சில பாகங்களை வேறோரிடத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

லோகல் போர்டுகளைப்பற்றிய விஷயங்கள்.

சந்தைகளையும், திருவிழாச் சந்தைகளையும், உற்சவங்களையும் தரம் பிரித்தல்.

தாலூகா போர்டுகள் பஞ்சாயத்துக்களை கவனித்திருக்கும் விதம்.

பொந்தூர்.—"திருத்தப்பெற்ற சட்டம் அமுலுக்கு வந்த நாள் முதல் பஞ்சாயத்துக்களிலுள்ள சந்தைகள் பஞ்சாயத்துச் சந்தைகளாக தரம் பிரிக்கப்பட்டிருக்கின்றன."

கோபிசெட்டிபாலயம்.—இத்தேதியில் தாலுகா போர்டின் எல்லைக்குள் இருக்கும் எல்லா சந்தைகளையும்,—இவைகளில் ஸ்த்தியமங்கலம், பவானி, மோதச்சூர் என்ற ஸ்தலங்களிலுள்ள வார சந்தைகளும் பவானி, கோபிசெட்டிபாலயம் என்றவிடங்களிலுள்ள தினசரி சந்தைகளும் அடங்கி இருக்கின்றன—தாலுகாச் சந்தைகள் என்று தரம் பிரிக்கப்படும். வரும் காலத்தில் ஸ்தாபிக்கப்படும் சந்தைகள் பஞ்சாயத்துக்களைச் சேரும். ஒரு பஞ்சாயத்திலுள்ள எல்லாச் சந்தைகளிலுமிருந்து ரூ. 500 அல்லது அதில் குறைந்தோ வருமானம் கிடைக்குமாகில் அந்தப் பணம் முழுதும் பஞ்சாயத்து நிதிக்குக் கொடுக்கப்படும். 500 ரூபாய்க்கதிகமாயிருந்தால் அப்பஞ்சாயத்துக்கு முதலில் 500 ரூபாயும், இந்த 500 ரூபாய்க்குக் கூடுதலுள்ள வருமானத்தில் 50% அதாவது பாதியும் கொடுக்கப்படும்.

சநூர்.—"அரவாக்குறிச்சியிலும், பல்லபட்டியிலுமுள்ள சந்தைகளிலிருந்து கிடைக்கும் ஒரு வருஷ வருமானத்தில் 40% அந்தப் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். பரமதி, உப்பிடிமங்கலம், ஆலமரத்துபட்டி, அன்னூர், சின்ன தாராபுரம் போன்ற இதர பஞ்சாயத்துச் சந்தைகளிலிருந்து கிடைக்கும் ஒரு வருஷ விற்பனை வருமானத்தில் 10% அதாவது பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்படும். 1930-ம் வருஷத்திய லோகல் போர்டுகளின் திருத்தப்பெற்ற சட்டத்தின் செக்ஷன் 168 படியும் அதில் கூறியிருக்கும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டும் பஞ்சாயத்துக்கள் தாமாகவே புதுச்சந்தைகளை ஸ்தாபிக்கும்வரை இந்த ரூல் அமுலிலிருக்கும். அவ்விதம் புதுச்சந்தைகள் ஸ்தாபிக்கும்பொழுது, இப்பொழுது தரம் பிரித்திருக்கும் விதம் பணம் கொடுக்கவேண்டுமா, அல்லது, அதில் மாறுதல் ஏற்படுத்லாமா, அல்லது அதை முற்றிலும் நிறுத்திவிடலாமா என்ற பிரச்னைகளை தாலுகா போர்டார் கவனிப்பார்கள்."

கார்வேத் நகர்.—"1930-ம் வருஷம் ஆகஸ்டுமீ 26உ முதல் திருத்தணி, புத்தூர், வெடியன்காடு என்ற பஞ்சாயத்துக்களிலுள்ள சந்தைகளை தாலுகாபோர்டுச் சந்தைகள் என்று கருதுவதற்கு இந்த போர்டார் இஷ்டப்படவில்லை. அவைகள் பஞ்சாயத்துச் சந்தைகள் என்று கருதப்படலாம். நாகரி, கஞ்சிராக குருவராக கந்திரிதை, பல்லிபேட், தேவலம்பேட், பத்தகுண்ட என்ற சந்தைகள் தாலூகாபோர்டு சந்தைகளாகவே இனிமேலும் கருதப்படும்."

லோகல் போர்டுகளைப் பற்றிய விஷயங்கள்.

பாலகாட்.—"இந்த தாலுகாவிலுள்ள சந்தைகளெல்லாவற்றையும் தாலுகா சந்தைகள் என்று தரம் பிரிக்கவேண்டுமென்ற ஆபீஸ் நகலை போர்டார் ஒப்புக்கொண்டனர்."

பித்தாபுரம்.—"துணி, பித்தாபுரம் பஞ்சாயத்துக்களிலுள்ள சந்தைகளை தாலுகாச் சந்தைகளென்று தரம் பிரிக்கவும் அவைகளை கவனிப்பதற்குள்ள ஏற்பாடுகள் செய்யவும் போர்டார் ஏகமனதோடு தீர்மானித்தார்கள். இச்சந்தைகளுக்கு வேண்டிய சகல செலவுகளும் போக மீதியுள்ள வருமானத்தை போர்டும் அந்தந்த பஞ்சாயத்தும் சமமாக பாகித்துக்கொள்ளும். திருத்தப்பெற்ற சட்டம் அமுலுக்கு வந்த நாள் தொடங்கி மூன்று வருஷ காலத்திற்கு இந்த முறையை கையாளுவதாகவும், அதற்குப் பிறகு, அவசியமிருந்தால், மீண்டும் ஆலோசனை செய்வதாகவும் போர்டார் தீர்மானித்தார்கள். ஒவ்வொரு உத்தியோக வருஷமும் முடிந்தவுடன் பஞ்சாயத்திற்கு அதன் பாதிப் பங்குப் பணம் கொடுக்கப்படும். இந்த தீர்மானத்திற்கிசைந்தபடி, சந்தைகளையும், ஆபீஸ்களையும், கணக்குகளையும், பணங்களையும் தாலூகா போர்டிடம் பஞ்சாயத்துக்கள் ஒப்புவிக்கவேண்டும்."

புத்தூர்.—"(1) புத்தூரிலும், பெல்டன் காடியிலுமுள்ள சந்தைகளை அந்தந்த பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கவேண்டும், (2) சுப்பிரமண்ய, தர்மஸ்தல உப்பினங்காடி, குல்குண்டா என்ற ஸ்தலங்களிலுள்ள திருவிழாச் சந்தைகளும், உற்சவங்களும் தாலூகா உற்சவங்களென்று தரம் பிரிக்கவேண்டும். ஆனால் குல்குண்ட மாட்டு சந்தையால் வரும் நஷ்டத்தை ஈடு செய்ய ஜில்லா போர்டார் வருஷந்தோறும் பணம் கொடுக்கவேண்டும்."

விரித்தாசலம்.—"விரித்தாசலத்திலுள்ள வாரச் சந்தையை பஞ்சாயத்துச் சந்தை என்று கவனிக்கவேண்டுமென்று போர்டார் தீர்மானித்தார்கள். ஆனால் யூனியன் பஞ்சாயத்து அதன் எல்லைக்குள் இருக்கும் எல்லா சந்தைகளின் செலவுகளையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்; மேலும் சந்தை ஸ்தலத்தின் நிலவரியையும் அது கொடுக்கவேண்டும். கம்மாபுரம், செப்பகம் என்ற ஸ்தலங்களிலுள்ள சந்தைகளும் பஞ்சாயத்துக்களைச் சேர்ந்தவைகள் என்று தீர்மானிக்கப்பட்டது."

திருச்சிநப்பள்ளி —"தாலூகா போர்டின் ஆளுகையிலுள்ளதும் இதுவரை அவர்களால் நடத்தப்பட்ட எல்லா பொது வாரச் சந்தைகளும் தாலூகாச் சந்தைகள் என்று அவர் தரம் பிரித்திருக்கிறார்; இலுப்பூரிலுள்ள சந்தை பஞ்சாயத்துச் சந்தையாகும். இந்த தரம் பிரித்தல் 1930-ம் வருஷத்திய புது XI-வது சட்டம் அமுலுக்கு வந்த ஆகஸ்ட் 26-ம் தேதிமுதல் நடப்பில் வரும்."

உதயர் பாலயம்:—"ஸ்தல கவர்ன்மெண்டாரின் சம்மதத்தின்மேல், லோகல் போர்டு சட்டத்தின் 167-வது செக்ஷன்படி தாலூகாவின் எல்லையிலுள்ள எல்லா பொதுச் சந்தைகளையும் தாலுகாச் சந்தைகளென்று தரம் பிரிக்கவேண்டும். ஒவ்வொரு மார்க்கட்டிலிருந்தும் கிடைக்கிற வருமானத்தில் பாதி அந்த மார்க்கட்டு இருக்கும் பஞ்சாயத்துக்கு கொடுக்கவேண்டும்."

கிராம அபிவிருத்தி நிதி.

ஸர்க்கார் உத்தரவுகள்;—கிராம அபிவிருத்தி நிதியைக் குறித்த சில உத்தரவுகளை கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நிதிக்கு பிரத்தியேகமாக இவ்வருஷம் பணமொன்றும் அவர்கள் கொடுக்கப் போவதில்லையாம். ஆனால் கிராம ரஸ்தாக்களுக்கும், ஜலவசதிக்கும் அவர்கள் சாதாரணமாகக் கொடுப்பதுபோல் இவ்வருஷமும் அம்சவீத முறையில் உதவிப்பணங்கள் கொடுப்பார்கள். ஜில்லா போர்டாருக்கு கிடைக்கும் உதவிப்பணத்தை, வேண்டுமானால், இந்த நிதிக்கு அவர் கொடுக்கலாம். ஆனால் ஸ்தலஸ்தாபனங்களை கட்டாயப்படுத்த முடியாது.

கவர்ன்மெண்டார் இன்னும் கூறியிருப்பதாவது :—இந்த நிதியை கையாளும் கமிட்டியார் தாமாகவே வேலைகளை செய்வதற்குள்ள ப்லான்களையும் உத்தேசச் செலவுகளையும் தயாரித்து, அவ்வேலைகளை செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம். இதைப்போன்ற வேலைகள் செய்வதற்காக, 1930-வருக்கு முன்னிருந்த பஞ்சாயத்துக்களுட்பட எல்லா ஸ்தலஸ்தாபனங்களுக்கும் இந்த நிதியிலிருந்து கமிட்டியார் பணம் கொடுக்கலாம். இதற்குத் தேவையான விசேஷ பயிர்ச்சிபெற்ற உத்தியோகஸ்தர்களை அவர்கள் நியமிக்கலாம். அவர்களின் சம்பளங்களை இந்த நிதியிலிருந்து கொடுக்கலாம். மேலும் ட்ரங்குரோடுகளும், இரண்டாவது வகுப்பு ரோடுகளுமல்லாத இதர எந்த ரோடுகளையும் அவர் சீர்திருத்தம் செய்யலாம். அதற்கு வேண்டிய செலவை இந்நிதியிலிருந்து கொடுக்கலாம்.

சர்க்கார் உதவிப்பணத்தைப் பங்கிடும் முறை.

சென்னை சட்டசபையில் 28-3-30-ல் பிரதம மந்திரி கனம் பி. முனிசாமி நாயுடு கூறியதில் சிலபாகங்களாவன:—

"ஸ்தல ஸ்தாபனங்களுக்கு உதவிப்பணங்கள் பங்கிட்டுக்கொடுக்கும் முறையை திருத்தவேண்டுமென்று எனது நண்பர் கோயமுத்தூர் மெம்பர் கூறினார். மேலும் ஸ்தலஸ்தாபனங்கள் பாதிப்பணம் கொடுக்கவேண்டும்; பிறகு அரசாங்கத்தார் பாதிப்பணம் கொடுப்பார்கள் என்ற முறை சௌகரியமல்லாததால் அதை எடுத்துவிடவேண்டுமென்றும் அவர் அபிப்பிராயப்பட்டார். ஆனால் சில ஸ்தலஸ்தாபனங்களின் வருமானத்தைக் கவனித்தபிறகு, ஏதேனும் வேலைக்கு பாதிப்பணம் கொடுக்க அவைகளுக்கு சக்தியில்லையானால், அரசாங்கத்தார் தாம் சாதாரணமாக கொடுக்கிற பாதி உதவிப் பணத்திற்கு மேலாகவும், அநேக சந்தர்ப்பங்களில் ⅔ விகிதமும் கொடுத்திருக்கின்றனர். ("பேரம்" என்ற ஒரு கூச்சல்) அவ்விதம் கொடுத்திருப்பது பேரத்தாலென்று நான் எண்ணவில்லை. ("தர்க்கத்தால்" என்ற ஒரு கூச்சல்) அது தர்க்கத்தாலுமன்று. உதாரணமாக, கொஞ்சக்காலத்திற்குமுன் சில பஞ்சாயத்துக்களின் வருமான ஸ்திதி ஆராயப்பட்டது. அரசாங்கத்தாரின் உதவியை அவைகள் நாடுவதாகக் காணப்பட்டன. ஸ்தலஸ்தாபனங்களின் இன்ஸ்பெக்டரின் சிபார்சின்மேல் அப்பஞ்சாயத்துக்களுக்கு வேலைக்கு அவசியமுள்ள செலவில் ⅔ கொடுக்கப்பட்டது. இதைப்போலவே எனது கனம்பொருந்திய நண்பர் ஸ்ரீ ரங்கநாத முதலியார் பிரதிநிதியாகவிருக்கும் பெல்லாரி, அனந்தப்பூர் ஜில்

லாக்களில் கிராம ஜலவசதிக்காக உதவிப்பணம் கொடுக்கப்பட்டது. அப்பொழுது பாதி கிராண்டுமுறை கையாளப்படவில்லை; கூடுதல் விகிதமே கொடுக்கப்பட்டது. அநேகம் பஞ்சாயத்துக்களுக்கும் $\frac{2}{3}$ அல்லது $\frac{3}{4}$ விகிதம் கூட கொடுக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாம் வகுப்பு ரஸ்தாக்கள் விஷயத்திலும் இவ்விதமே கொடுக்கப்பட்டிருக்கின்றது. நீலகிரி ஜில்லாபோர்டுக்கு எவ்விதம் கிராண்டு அளித்திருக்கிறது என்பதை கவனியுங்கள். அவ்விடத்தில் ட்ரங்கு ரோடுகளுக்கு முழு கிராண்டும், இரண்டாம் வகுப்பு ரஸ்தாக்களுக்கு பாதி கிராண்டும், கொடுக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் கிராண்டுக்காகக் கொடுக்க நிச்சயித்திருக்கும் பணத்தின் தொகையைக் கவனித்து, எந்தெந்த ஜில்லாபோர்டுகளுக்கு வேலை செய்ய வருமானம் இருக்கின்றனவோ அவைகளுக்கு வேலையை நடத்துவதற்குள்ள பணமும், போதுமான பணமில்லாத ஸ்தாபனங்களுக்கு பாதிக்கு மேல் கிராண்டும் கொடுப்பதற்குள்ள வழி ஒன்றை நாம் கண்டுபிடிக்கவேண்டும்.

•

"எனது கனம்பொருந்திய நண்பர் ஸ்ரீ ராமஸ்வாமி அய்யரின் குறை என்னவெனின், ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்படும் உதவிப்பணம் சரியான காலத்தில் கொடுக்கப்படாததால் அவைகளுக்கு அந்தப்பணத்தை செலவு செய்ய முடியவில்லையாம். ஆனால் அவருக்கு நான் ஓர் விடை அளிக்க விரும்புகிறேன். இவ்விடத்தில் கிராண்டுகள் பங்கிட்டுக் கொடுக்கும் திட்டம் என்னவென்பதை நான் எடுத்துக் கூறுவேன். ஸ்தல ஸ்தாபனங்களுக்கு கொடுக்கவேண்டும் பணம் எவ்வளவென்று நிச்சயிக்கப்பட்டவுடன், அதாது ஜில்லா போர்டுகளின் கைவசத்தில் அப்பணம் ஒப்புவிக்கப் படுகின்றது. இதில் எவ்வித காலதாமதத்தையும் அரசாங்கத்தார் காண்பிப்பதில்லை. இதுவரை ரிஜிஸ்திரார் ஜனரல் ஆப் பஞ்சாயத்து என்றிருந்த லோகல் போர்டுகளின் இன்ஸ்பெக்டரின் கைவசம் பாகிப்பதற்காக வோரொரு பணத் தொகை கொடுக்கப்படுகின்றது. இம்முறை சென்ற இரண்டு மூன்று வருடங்களாகக் கையாளப்படுகின்ற தென்பதை நான் எடுத்துக் கூறுவேன். இவ்வருடம் லோகல் போர்டுகளின் இன்ஸ்பெக்டர் முழுத்தொகையையும் பங்கிட்டு கொடுத்திருக்கிறார். சில பஞ்சாயத்துக்களுக்கு கொடுப்பதற்காக நாம் கூடுதல் கிராண்டு இவ்வருடம் ஜனவரி மாதத்தில் அவருக்குக் கொடுத்தோம். வருங்காலத்தில் பஞ்சாயத்துக்களின் எண் அதிகரித்து அவைகளுக்குக் கூடுதல் உதவிப்பணம் அவசியமாகில், அரசாங்கத்தார் மாகாண கவர்ன்மெண்டின் வருமானத்தைப் பொறுத்து, அவைகளுக்குக் கூடுதல் கிராண்டு அனுமதிப்பார்கள் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். இத்தருணத்தில் நான் ஒன்று சொல்ல இஷ்டப்படுகிறேன். ஜில்லா போர்டார் உதவிப் பணத்தை பங்கிட்டு கொடுப்பதில் காலதாமதம் செய்கின்றனரென்றும், ஆதலால் அப்பணங்களை செலவு செய்ய முடியவில்லை என்றும் நான் கூறமாட்டேன். ஜில்லா போர்டாரைக்குறித்து இவ்விதம் புகார் கூறுவது சரியன்று. ஜில்லா போர்டாரிடம் பணம் ஒப்புவிப்பதின் காரணம் என்னவெனின் அவர்களுக்கு பணங்களை பங்கிட்டுகொடுப்பதில் சில சௌகரியங்கள் கொடுப்பதற்காகவே. உதாரணமாக, ஏதேனும் ஸ்தலஸ்தாபனம் தனது வேலையை செய்ய முடியாமல் போய்விட்டால், அதற்கு அவ்வேலைக்காகக் கொடுத்திருக்கும் உதவிப் பணத்தை உடனேயே அதே ஜில்லாவி

ஆந்திர மாகாண விவசாயிகளின் சங்கம்.

ஸ்திர கமிட்டி கூட்டம்.

சென்னை மாகாண கூட்டுறவு யூனியன் கட்டிடத்தில் ஆகஸ்ட் மீ 2-ம் தேதியன்று ஆந்திர மாகாண விவசாயிகள் சங்கத்தின் ஸ்திர கமிட்டிக் கூட்டம் ஸ்ரீ வி. ராமதாஸ் பந்துலுவின் தலைமையில் நடைபெற்றது. ஸ்திர கமிட்டி அங்கத்தினர்களில் அநேகர் வந்திருந்தனர். சங்கத்தின் பேட்ரனாகிய மகா-ா-ா-ஸ்ரீ டிவான் பஹதூர் எம். ராமசந்திர ராவ் அவர்களும் வந்திருந்தார். கிருஷ்ணா ஜில்லாவிலும் கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி ஜில்லாக்களிலும் ஏற்படுத்தப் போகின்ற ரீ ஸெட்டில் மெண்டு பிரச்னையிலும், கிராமாந்தர கடன்காரனை தற்காலத்திய நெருக்கடி ஸ்திதியிலிருந்து எவ்விதம் சகாயிக்கக் கூடும் என்ற பிரச்னையிலும் அவர் கலந்து கொண்டார். இந்த விஷயங்களுக்கு ஏற்ற தமது அரும்பெரும் ஆலோசனைகளையும் கமிட்டியின் முன் அவர் கொண்டுவந்தார். ரீ-ஸெட்டில்மெண்டைக் குறித்தும் கடன்காரரை சகாயிப்பதைக் குறித்தும் கமிட்டியார் கீழ் குறிப்பிடும் தீர்மானங்களை நிறைவேற்றினர்.

(இதன் தொடர்ச்சி 261-வது பக்கம் பார்க்க.)

(259-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

லுள்ள வேறொரு தாலுகா போர்டுக்கு மாற்றிக் கொடுத்துவிட ஜில்லா போர்டாருக்கு சௌகரியமளிப்பதற்காகவே இவ்விதம் செய்யப்படுகிறது. சென்ற மூன்று நான்கு வருடங்களாக இம்முறை நடப்பில் இருக்கின்றது. அது மிகவும் சௌகரியமென்று தெரியவருகிறது. ஆதலால் அதை ஏன் மாற்றவேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. பாதிப்பணம் சித்தம் செய்ய முடியாத அநேகம் தாலுகா போர்டுகள் இருக்கின்றன. அவைகளின் விஷயத்தில், ஜில்லா போர்டார் உதவிப் பணமோ, கடனோ கொடுக்க முன்வருகிறார்கள். ஏதேனும் தாலுகா போர்டுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் பாதிப்பணத்தைச் சேர்க்க முடியவில்லையாகில், அவைகளை கால்வாசிப் பணமாவது தமது வருமானத்திலிருந்து சேர்க்க ஜில்லாபோர்டார் கேட்கிறார். மீதி முக்கால் பணத்தையும் தாம் கொடுக்கிறார். இந்த கால் விகிதப் பணம் கூட பேருக்கு மாத்திரம்தான். பணத்திற்குப் பதிலாக வேலை செய்தால் போதும். கிராமத்தார்களே வேலை செய்து முடிப்பதாக ஒப்புக்கொள்கிறார்கள். அவர்கள் செய்யும் கூலிவேலை, பணமாக கணக்கிடப்படுகிறது.

I. கிருஷ்ணா, கீழ் கோதாவரி, மேற்கு கோதாவரி ஜில்லாக்களில் நிலவரி ரீ-ஸெட்டில்மெண்டு ஏற்படுத்துவதைக் குறித்து, தீர்மானிக்கப்பட்டதாவன :—

(a) ரீ ஸெட்டில்மெண்டின் அநீதியையும், தற்பொழுதுள்ள கிஸ்துவிலிருந்து $18\frac{3}{4}\%$ அதிகப்படுத்தியிருப்பதையும் விளக்கி ஒரு கேஸ் தயாரிக்கவும்.

N.B. தயாரிக்கப்பட்ட கேஸில் போலவரம் தீவு ஜலவரி ரேட்டை பிரத்தியேகமாக விசாரிக்கவும்.

(b) சம்பந்திக்கப்பட்ட ஜில்லா ஜனங்களின் அபிப்பிராயங்களை அறியும் பொருட்டு ஒவ்வொரு ஸ்தலத்திலும் கூட்டங்களும், மகாநாடுகளும் கூடவேண்டும். இவ்விதம் தயாரிக்கப்பட்ட ஜன அபிப்பிராயங்களை செப்டம்டர் கடைசிக்குள் வொர்க்கிங் கமிட்டிக்கு அனுப்பிக் கொடுக்கவும். போலவரம் தீவிலுள்ள ஜலவரி ரேட்டை ஆலோசிப்பதற்கு பிரத்தியேக மகாநாடொன்று கூட்டவும்.

(c) 1931-ம் ஞு அக்டோபர் மீ 4-ம் வ 1 மணிக்கு எல்லூரில் கூடப்போகின்ற ஸ்திர கமிட்டியின் அடுத்த கூட்டத்தில் இன்னென்ன செய்யவேண்டிய தென்பதைப்பற்றி ஆலோசிக்கவும்.

(d) ஆரோக்கியஸாமி ரிப்போர்ட்டின் விலை மிகவும் அதிகமாதலால் (20 ரூ) அதை குறைப்பதற்கு சென்னை கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்ளவும்.

(e) ஆரோக்கியஸாமி ரிப்போர்டின் சாரத்தை தெலுங்கில் எழுதுவதற்கு ஸ்ரீமான்கள் என். ஜி. ரங்காவையும் எம். பாப்பி நீடுவையும் கேட்டுக் கொள்ளவும். அவர் எழுதி முடிந்தவுடன் அப்புஸ்தகத்தை வொர்க்கிங் கமிட்டி அச்சிட்டு பிரசுரம் செய்யவும்.

II. கிராமாந்தரக் கடன்பாரத்தைக் குறைப்பதற்காக கீழ்குறிப்பிடும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

(a) இந்தியாவிற்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் அரிசிமேல் பாதுகாப்புவரி ஏற்படுத்தவும், தற்பொழுது கோதுமை மேலுள்ள இறக்குமதி வரியை இன்னும் உறுதிப்படுத்தவும் சென்னை கவர்ன்மெண்டாரையும், இந்தியா கவர்ன்மெண்டாரையும் அவசரமாக இச் சங்கம் தெரிவிக்கவேண்டும்.

(b) கிராமாந்திரங்களின் ஏற்பட்டிருக்கும் பணக் கஷ்டத்தின் காரணம் கவர்ன்மெண்டார் நாணயங்களை குறைப்பதேயாகுமென்று இச் சங்கம் அபிப்பிராயப்படுகின்றது. இதனால் இராஜ்யத்தில் சாமான்களின் விலை மிகவும் குன்றிவிட்டதுமன்றி, ஜனங்களின் கஷ்டங்களும் அதிகரித்துவிட்டன. கூடுதல் நாணயங்களை இராஜ்யத்தில் டரவ செய்வதற்குள்ள முறைகளை இப்பொழுதே கையாளுவதற்கு இந்தியா கவர்ன்மெண்டாரை இச் சங்கம் வேண்டிக்கொள்கின்றது.

(c) தற்காலத்திய பொருளாதார மந்தத்தினுல் ஏற்பட்டிருக்கும் நிலைமை மிகவும் கடினமாதலால் அடுத்த கிஸ்துவரியை கொடுப்பதற்கு விவசாயிகள் அசக்தராவார்கள். ஆதலால் நிகழும் பசலி வருஷத்திய கிஸ்துவரியில் ஒரு பிரதான அம்சத்தை நீக்கிக்கொடுக்க உடனே ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டாரை இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

(d) அசாதாரண பொருளாதார நிலைமை ஏற்பட்டிருப்பதால் பழைய கடன்கள்மேலுள்ள வட்டியை குறைப்பதற்கும் அவ்விதம் குறைந்த புது வட்டி ரேட்டையே புதுக் கடன்கள்மேல் வசூலிக்கக்கூடுமென்றும் ஓர் அவசரச்சட்டம் கொண்டுவரலாமென்று இச்சங்கம் அபிப்பிராயப்படுகின்றது. அதற்குவேண்டிய சட்டத்தை கையாளுவதற்கு அரசாங்கத்தாரை இச்சங்கம் கேட்டுக்கொள்கின்றது.

(e) பழைய பாக்கிகளை முற்றிலுமோ அல்லது அவைகளின் பிரதான ஒரு பாகத்தையோ நீக்கிக்கொடுக்கவேண்டுமென்று நிலச்சுவான்தார்களை (ஜமீன்தார்) இச்சங்கம் வேண்டிக்கொள்கின்றது. இவ்விதம் செய்வதால் பசலி 1338 முதல், அதற்கு பின் பசலிகளிலுமுள்ள பாககிகளை வசூலிபபது சௌகரியமாயிருக்கும். மேலும் பசலி 1338 முதலுள்ள பாக்கியில் சில பாகத்தையும் தள்ளிக்கொடுக்க வேண்டுமென்று இச் சங்கம் கேட்டுக் கொள்கின்றது.

(f) கடன் வசூலிப்பதை கொஞ்சகாலத்திற்கு பிறகு வைத்துக் கொண்டும் வாயிதாக்கள் கொடுத்தும், வட்டியைக் குறைத்தும் இன்னும் அநேகம் வழிகளிலும், இந்த பொருளாதார நெருக்கடி சமயத்தில் கடன்காரரை சகாயிக்க வேண்டுமென்று எல்லா கூட்டுறவு பாங்கிகளையும் வியாபார பாங்கிகளையும், லேவாதேவிக்காரர்களையும் இச்சங்கம் வேண்டிக் கொள்கின்றது.

கேரளச் சந்தன சோப்பை வாங்குங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் சுகத்தையும் ஆனந்தத்தையுமளிக்கும் சோப்பு இதுவே.

கோடையில் குளிமையையும் பரிமளத்தையும் கொடுக்கும் வெகு சிறந்த சோப்பும் இதுவே.

கேரள சோப்பு இன்ஸ்டியூட்,
கள்ளிக்கோட்டை.

நாமக்கல் ஸப்ஜில்லா பஞ்சாயத்துக் கமிட்டி.

1931-ம் வருஷம் மார்ச்சு 31-ம் தேதியோடு முடிவுபெறுகிற வருஷத்திய ஆட்சி ரிபோர்ட்.

(1930-1931)

1. சென்னை 1920ஆம் வருஷத்திய XV சட்டத்தின் செக்ஷன் 20-ன் கீழ் இந்தப் பஞ்சாயத்துக்களின் ஜாயின்டு கமிட்டி 1-4-30 முதல் 25-8-30 வரை வேலை செய்து கொண்டிருந்தது. 1930-ம் வருஷத்திய சீர்திருத்தப்பெற்ற லோகல் போர்ட்ஸ் சட்டத்தின் தாற்காலிக ப்ரோவிஷன்களுடைய ஷெடியூலின் 5-வது ஆர்டிகிலின் கீழ் இக்கமிட்டியார் 25-8-30 முதல் 30-11-30 வரை வேலைசெய்தனர். 30-11-30 ல் ஜெனரல் பாடி கூடி, 1930-ம் வருஷத்திய திருத்தப்பெற்ற XI சட்டத்தின் 60-வது செக்ஷனுக் கேற்றவாறு அதன் பைலாக்களை மாற்றிக்கொண்டது. அத்தேதிமுதல் புதிய பைலாக்களின் கீழ் கமிட்டி வேலைசெய்துகொண்டிருக்கின்றது.

2. இக்கமிட்டி 27-1-29-ல் ஸ்தாபிக்கப்பட்டது. அதே தேதியில் தனது அமைப்பைப்பற்றிய முறைகளை அது ஏற்படுத்திக்கொண்டது. எனினும் உண்மையில் இவ் வருஷம் அதன் இரண்டாவது வருஷமாகும்.

3. ஜெனரல் பாடி :—ஜெனரல் பாடியின் அங்கத்தினராக 65 பஞ்சாயத்துக்களும், அவைகளின் 599 பஞ்சாயத்தார்களும், சேர்த்துக்கொண்ட (Co-opted) 6 மெம்பர்களும் இருக்கின்றனர். ரூல்படி கொடுக்கவேண்டிய பீஸை 15 பஞ்சாயத்துக்கள் கொடுக்காததினால் அவை இந்த ஸப் ஜில்லா பஞ்சாயத்துக் கமிட்டியோடு சேரவில்லை. கமிட்டி மீட்டிங்குகளில் இந்த 15 பஞ்சாயத்துக்களுக்கும் வோட்டுரிமை இல்லையாகிலும், இதர பஞ்சாயத்துக்களின் வேலைகளை எவ்விதம் இக்கமிட்டி கவனித்ததோ அது போலவே அவைகளின் வேலைகளையும் கவனித்தது.

4. நிர்வாகக்கமிட்டி :—நிர்வாகக்கமிட்டியில் 15 மெம்பர்கள் இருக்கிறார்கள். 20-4-30 வரை நாமக்கல் ரவினியூ டிவிஷனல் ஆபீஸர் Mr. K. சுப்பிரமண்ய அய்யர் பிரசிடெண்டாகவிருந்தார். அவரை விருத நகருக்கு ஸ்தலமாற்றம் செய்ததால் ஷை தேதியில் அவர் பிரசிடெண்டு வேலையைக் காலிசெய்தார். அவருக்குப்பின் டிவிஷனல் ஆபீஸராக வந்த Mr. M. P. விஜயராயரை கமிட்டியார் நிர்வாகக்கமிட்டி அங்கத்தினராகச் சேர்த்துக்கொண்டு, பிரசிடெண்டாகவும் தேர்ந்தெடுத்தார்கள். 6-7-30 முதல் 27-11-30 பரியந்தம் அவர் அவ்வேலையை கவனித்தார். 27-11-30ல் தாம் ஒரு உத்யோகஸ்தராவதாலும், புதுச் சட்டத்தின்படி உத்தியோகஸ்தர்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் வேலைசெய்வதற்கு ரூலில்லாததாலும், அவர் பிரசிடெண்டு வேலையை ராஜிநாமா செய்தார். பிறகு ஜில்லா அர்பன் பாங்கியின் பிரசிடெண்டும், கூட்டுறவு விஷயத்திற்காக சேர்த்துக்கொண்ட மெம்பருமாகிய Mr. T. ஆகி நாராயண செட்டியார் பார்-அட்-லாவை 6-2-31ல் பிரசிடெண்டாக நிர்வாகக் கமிட்டி தேர்ந்தெடுத்தது. இதுகால் அவரே பிரசிடெண்டு வேலையை பார்த்து

வருகிறார். பழய சட்டத்தை ரத்து செய்தபொழுது, சேர்த்துக்கொண்ட மெம்பர்களாகவிருந்த ஆணரரி ஆர்கனைசர்கள் மெம்பர் பதவிகளை இழந்தனர். ஆனால் கமிட்டி தொடர்ந்து வேலைசெய்வதற்காக பைலாக்களை திருத்தம் செய்வதுவரை காரியதரிசி தமது வேலையைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியிருந்தது. 30-11-30ல் கூடிய ஜெனரல் பாடி, நாமக்கல், மோகனூர், பரமதி என்ற மூன்று ஸ்தலங்களின் ஆணரரி ஆர்கனைசர்களையும், அந்த ஸ்தலத்தில் கிராம புனருத்தாரண வேலையைச் செய்கின்ற ம-ா-ா-ஸ்ரீ டிவான் பகதூர் R. ராமச்சந்திர ராவு அவர்கள் வி. எஸ். ஐ யையும் 1930 சென்னை சட்டம் XI, செக்ஷன் 30 (2)ன் கீழ் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொண்டது. 30-11-30ல் புது பைலாவின்படி பழய காரியதரிசி மீண்டும் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பொழுதும் அவர் அவ்வேலையை கவனித்து வருகிறார்.

5. கூட்டங்கள் :—3 ஜெனரல் பாடிக் கூட்டங்களும் நாமக்கல் தாலூகாவைச் சார்ந்த எல்லா பஞ்சாயத்துக்களின் கூட்டமொன்றும் இவ்வருஷத்தில் கூடின. அவைகளுக்கு அங்கத்தினர்களில் பெரும்பான்மையோரும் வந்ததிலிருந்து, அவர்களுக்குத் தமது வேலையிலுள்ள உற்சாகம் நன்கு தெளிவாகிறது.

நிர்வாகக் கமிட்டியார் இவ்வருஷம் 4 தடவை கூடினர். காரியதரிசிக்கு 4 மாத காலம் நிர்வாகக் கமிட்டியைக் கூட்ட அதிகாரமில்லாமல் போய்விட்டது. இதற்கு லோகல் போர்ட்ஸ் சட்டத்தில் ஏற்பட்ட திருத்தமே காரணமாகும். அவர் பழய சட்டத்தின்படி ஆனரரி ஆர்கனைசராக விருந்ததாலும், அதனால் சேர்க்கப்பட்ட அங்கத்தினராக விருந்ததாலும் நிர்வாகக் கமிட்டியின் அங்கத்தினர் பதவியை அவர் புதுச் சட்டத்தின் பிரகாரம் இழக்கவேண்டி வந்தது. ஆதலால் அவருக்கு நிர்வாகக் கமிட்டியை கூப்பிடுகிற உரிமையும் நின்றுவிட்டது.

மகாநாடு :—ஜெனரல் பாடிக் கூட்டத்திற்கு அங்கத்தினர்களில் பெரும்பான்மையோரும் வந்திருந்ததாலும், ஒன்று சேர்க்கவேண்டிய (consolidation) வேலை இருந்ததாலும், பைலாக்களை மாற்றம் செய்யவேண்டியது போன்ற வேலைகளிருந்ததாலும், இந்த ஆண்டில் மகாநாடொன்றும் கூடவில்லை.

வேண்டுமளவு அங்கத்தினர்கள் (quorum) வாராததற்காக ஒரு கூட்டமும் ஒத்திவைக்கப்படவில்லை.

6. எஸ்டாபிலிஷ்மெண்டும் ஆபீசும் :—கமிட்டியின் ஆபீஸ் காரியதரிசியின் வீட்டில் இருக்கின்றது. அவரே ஆபீசு வேலையையும், நிர்வாக வேலையையும் செய்து வருகிறார்.

கீழ் குறிப்பிடும் சிப்பந்திகள் கமிட்டியின்கீழ் வேலையைச் கவனித்து வந்தனர்

1-4-30 முதல் 31-8-30 வரை ஒரு வொர்க் சார்ஜ்டு ஓவர்சியர்.

1-4-30 முதல் 10-4-30 வரை ஒரு மேஸ்திரி.

1-4-30 முதல் 31-8-30 வரையும், 6-12-30 முதல் 31-3-31 வரையும் ஒரு பையன் காரியதரிசியின் கீழ் வேலை செய்தான்.

நாமக்கல் ஸப் ஜில்லா பஞ்சாயத்துக் கமிட்டி

ஜில்லாவிலுள்ள பஞ்சாயத்துக்களுக்காக பிரத்தியேகம் என்ஜினீயர் உத்தியோகஸ்தர்கள் சேலம் ஜில்லா போர்டார் நியமித்ததால், நமது என்ஜினீயர் உத்தியோகஸ்தர்கள், அதாவது, ஓவர்சியரும், மேஸ்திரியும், ஜில்லா போர்டு உத்தியோகஸ்தர்களோடு சேர்க்கப்பட்டனர். ஓவர்சியருடையவும், மேஸ்திரியுடையவும், தினசரி பட்டிகையை காரியதரிசி கவனித்து வந்தார்.

என்ஜினீயர் உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டிய, பாரங்களும், காகிதங்களும், தற்கால செலவுகளும், படங்களும் கமிட்டியின் முதலிலிருந்து செலவு செய்யப்பட்டது. காரியதரிசியின் ஆபீசுக்குவேண்டிய காகிதத்தின் செலவுகளும், அச்சிடுவதற்குள்ள செலவுகளும், கமிட்டியின் முதலிலிருந்து கொடுக்கப்பட்டன.

மெம்பர்களின் பிரயாணப் படி: 1929 30ல் ஆபீசில் இருந்த ஒரு மெம்பருக்கு ரூ. 4 8-0 பிரயாணப் படியாக கொடுக்கப்பட்டது. இதன்றி வேறெந்த நிர்வாகக் கமிட்டி மெம்பருக்கும் இதற்காக பணம் கொடுக்கவில்லை.

ஆபீஸ் வேலை: காரியதரிசியைச் சகாயிப்பதற்காக குமஸ்தாக்கள் ஒருவரையும் நியமிக்கவில்லை. எனினும் காரியதரிசிக்கு தலைஸ்தானத்திலும் ஆபீசிலுமே வருஷத்தின் கடைசி மாதங்களைக் கழிக்கவேண்டியிருந்தது. இதற்கு காரணம் என்னவென்றால் சென்ற மூன்று வருடங்களாக 80 பஞ்சாயத்துக்களிலும் மும்மரமாக வேலை செய்வதாகும். அதனால் ஆபீஸ்வேலை அதிகரித்தது. மேலும் பஞ்சாயத்தாட்சியைக் குறித்தும், பஞ்சாயத்து வழக்குகளைத் தீர்ப்பதற்கும் காரியதரிசியைக்கண்டு தகுந்த வழிகளை அறிந்துகொள்ளும் பொருட்டு அநேக தடவைகள் பஞ்சாயத் தங்கத்தினர்களும், பிரசிடெண்டுகளும் வருவது இதற்குக் காரணயாகும்.

7. வேலைகள்:—கிணறுகளும் ரஸ்தாக்களும்:-இக்கமிட்டியின் மேற்பார்வையில் இப்பஞ்சாயத்து எல்லைக்குள் 27,000 ரூ. பெறுமான ரஸ்தாவேலைகளும் ஜல சப்ளை வேலைகளும் நடத்தப்பட்டன. 1930-31ல் ரஸ்தாக்களுக்கும் ஜல சப்ளைக்குமாக சர்க்காரால் கொடுக்கப்பட்ட பணத்தின் விரிவான விவரங்களை கீழ் குறிப்பிடுகிறோம்.

	ரஸ்தா.			ஜல சப்ளை.		
	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.
நாமக்கல் ...	1,324	9	0	7,531	8	0
ராசிபுரம் ...	281	5	0	4,186	6	0
கூட்டுவதால் ...	1,605	14	0	11,717	14	0
பே ஆர்டர்கள் 2904/22-8-30-ம் 3004/27-10-30ம் படி நாமக்கல் சப் ஜில்லா பஞ்சாயத்துக்களின் கமிட்டிக்கு எஸ்டாபிலிஷ்மெண்டு செலவிற்காக கொடுத்தபணத்தில் மீண்டெடுத்தவை ...				412	11	0
மொத்தம்	1,605	14	0	12,130	9	0

8. **பஞ்சாயத்துப் பள்ளிக்கூடக் கட்டிடங்கள்** :—இவ்வருஷம் ரூ 7,792 பெறுமான 10 பள்ளிக்கூடக் கட்டிடங்களை பஞ்சாயத்துக்கள் ஸ்தாபித்தன. இத்தொகையில் பஞ்சாயத்துக்களுக்கு நேரிலேயே லோகல் போர்ட்ஸ் இன்ஸ்பெக்டரின் வழியாக சர்க்கார் ரூ. 3,020 யை பள்ளிக்கூடக் கட்டிட உதவிப்பணமாகக் கொடுத்தார்கள்.

கல்வி :—இவ்வருஷம் 46 பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்கள் நடந்துவந்தன. 55 உபாத்தியாயர்கள் உத்தேசம் 1550 பையன்களுக்கு ஆரம்பக் கல்வியை கற்றுக்கொடுத்தனர். தற்காலிக உபாத்தியாயர்களாகவிருக்கச் சம்மதம் பெற்ற 4 உபாத்தியாயர்களைத் தவிர இதர உபாத்தியாயர்களெல்லோரும் விசேஷ யோக்கியதை உள்ளவர்களாவார்கள். கிராமாந்தரங்களில் வசதிக்கு வேண்டிய வீடுகளும் இதர சுகங்களும் கிடைப்பதற்குள்ள கஷ்டத்தினால் விசேஷ பயிர்ச்சி பெற்றவர்களும் யோக்கியதையுள்ளவர்களுமான உபாத்தியாயர்கள் கிடைப்பது பிரயாசமாகவிருக்கின்றது. யோக்கியதை பெற்றவர்கள் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களில் ஸ்திரமாகவிருக்க உத்தேசிக்கவில்லையென்று தெரியவருகிறது. பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களில் வேலைபார்த்துக்கொண்டு ட்ரெயினிங் பள்ளிக்கூடத்துக்குப் போவதற்கு சிரமிக்கிறார்கள் அல்லது ஸ்கூல் பைனல் பரீட்சைக்குப் போவதற்கு நடுவிலுள்ள சமயத்தில் இவ்விடத்தில் வேலை பார்ப்பது நல்லதென்று எண்ணுகிறார்கள். ஆதலால் கிராமப் பஞ்சாயத்துப் பள்ளிக்கூட மாணவர்களின் கல்வியில் ஸ்திரதை ஏற்படுவதில்லை. மேலும் கிராமவாசியின் பணக் கஷ்டத்தால் ஒன்று இரண்டு பஞ்சாயத்துக்களாலன்றி வேறெந்த பஞ்சாயத்துக்களாலும் உபாத்தியாயர்களுக்கு கூடுதல் சம்பளம் கொடுக்கமுடியவில்லை.

10 **சந்தைகள்** :—பில்லூர் கிராமப் பஞ்சாயத்திலும், பில்லிகப்பாளயம் கிராமப் பஞ்சாயத்திலும், பச்சல் கிராமப் பஞ்சாயத்திலும் இவ்வருஷம் வாரச் சந்தைகள் நடக்கின்றன. இவைகளில் பில்லூர்ச் சந்தை மிகவும் பெரியதானது. அது தாலுகா போர்டின் அதிகாரத்திலிருக்கின்றது. மற்ற இரண்டு சந்தைகளும் அதாது பஞ்சாயத்தின் கீழிருக்கின்றன.

11. **சுகாதாரத்திற்கும் விளக்குப் போடுவதற்குமாக** நாமக்கல் தாலுகா போர்டார் சில பஞ்சாயத்துக்களுக்கு சொல்ப பண உதவி புரிந்தனர்.

12. **வேறுவேலைகளும் சாரணப்பயிர்ச்சியும்** : 4 பஞ்சாயத்து உபாத்தியாயர்களுக்கு கப் உபாத்தியாயர்களுக்குள்ள பயிர்ச்சி கற்பிக்கப்பட்டது. வேறு இரண்டு பேர்களுக்கு சாரணப்பயிர்ச்சி அளிக்கப்பட்டது. இவர்களில் ஒருவர் கப் மாஸ்டர் ட்ரெயினிங் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். மற்ற மூன்று பேர்களும் ஆனப்பாலயம், தனதம்பட்டி (தத்தாதிரிபுரம்) பிலிகல்பாலயம் பஞ்சாயத்துக்களில் கப் கூட்டங்களை ஏற்படுத்தி யிருக்கின்றார்கள். மாகாண தலைநகரிலுள்ள உத்தியோகஸ்தர்களின் அனுமதியை இவர் பெற்றிருக்கின்றனர். கப் ஆபீசர்கள் என்ற பதவியும் அவர்களுக்கு கிடைத்திருக்கின்றது. இரண்டு சாரண உபாத்தியாயர்களில் ஒருவர் ட்ரெயினிங் பள்ளிக்கூடத்தில் சேர்ந்திருக்கின்றார். வேறொருவர் விட்டுவிட்ட தமது படிப்பை துவக்குவதற்கு ஹைஸ்கூலில் சேர்ந்திருக்கின்றார்.

நாமக்கல் ஸப் ஜில்லா பஞ்சாயத்துக் கமிட்டி

ஸப் ஜில்லா பஞ்சாயத்துக்களின் காரியதரிசியே இந்த ஸப் ஜில்லாவிற்கு அஸிஸ்டண்டு ஜில்லா சாரணக்கமிஷனர் ஆவர். அவர் 1930-ம் ௵ மே மாதத்தில் கூநூரில் ஸ்டான்லி பார்க்கில் வைத்து சாரணக்கமிஷனர்களுக்கு பயிர்ச்சி அளித்த பொழுது அதில் சேர்ந்து பயிர்ச்சி பெற்றுக்கொண்டார்.

கிராமத்தலைவர்களும் முதல் உதவி வைத்தியசாலைகளும்:-சில பஞ்சாயத்துக்களில் முதல் உதவி வைத்தியசாலைகள் ஏற்படுத்துவதற்காக அவ்விடத்து 6 உபாத்தியாயர்கள், நாமக்கல் சர்க்கார் ஆஸ்பத்திரில் அஸிஸ்டண்டு சர்ஜன் டாக்டர் R. சுப்பய்யா M.B.BS, ன் கீழ் கற்றுக்கொள்ள அனுப்பப்பட்டனர். அடிப்படி மருந்துகளுக்கு 75 ரூபாயும், ஒரு வருஷத்திற்கு முதல் உதவி செய்கின்ற உபாத்தியாயர்களுக்கு உதவிப்பணத்திற்கு 60 ரூபாயும் ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் வேண்டியிருக்கின்றன.

• குடிநிறுத்தல்:—புதுச்சத்திரம் பிர்க்கா முழுதிலுமே குடி கிடையாது. ம-ா-ா-ஸ்ரீ டிவான் பஹதூர் R. ராமச்சந்திர ராவ் அவர்கள், C.S.I., ம-ா-ா-ஸ்ரீ T. ஆதிநாராயண செட்டியாரவர்கள், கிராம புனருத்தாரண சிப்பந்திகள் இவர்களின் ஊக்கமான பிரயத்தினத்தால் எல்லாக் கள்ளுக்கடைகளும் அடைக்கப்பட்டன. இந்த பிர்க்காவில் இரண்டு கிராமங்கள் தவிர வேறெல்லாம் பஞ்சாயத்துக்களாகும். அந்த இரண்டு கிராமங்களிலும் கூட பஞ்சாயத்துக்கள் சொற்பகாலத்தில் ஸ்தாபிக்கப்படும். இந்த எல்லைக்குள், கிராமப் பஞ்சாயத்துக்களின் அபிவிருத்தியின்பொருட்டு அமுந்தமான வேலைகள் செய்யப்படும்.

விவசாயத்திற்கு அடுத்த கைத்தொழில்கள். ராசிபூர்தாலூகா :—எலூர் கிராமப் பஞ்சாயத்தங்கத்தினரும், இக்கமிட்டியின் மெம்பருமாகிய சிவசாம்பய்யரின் கீழ் நூல் நூற்பதும் கைநெசவும் எலூர் பஞ்சாயத்தில நடந்துவந்தன. எலூருக்கு சமீபத்திலுள்ள காரடிப்பட்டிக் கிராமப் பஞ்சாயத்திலும் கையால் நூற்கப்பட்ட நூல்கள் சொற்பம் தயாரிக்கப்படுகின்றன.

நாமக்கல் தாலூகா :—சுங்ககரம்பட்டி, வில்விப்பாலயம், கோலரம் இந்தப் பஞ்சாயத்துக்களிலும், சமீபத்திலுள்ள சிறு கிராமங்களிலும் பெண்களுக்கு வேலையில்லாதபொழுது செய்வதற்காக நூல் நூர்க்கும் தொழில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

13. தாலூகாபோர்டுப் பஞ்சாயத்து உபதேசக் கமிட்டி:—திருத்தப்பெற்ற லோகல் போர்ட்ஸ் சட்டம் அமுலுக்கு வந்ததும், நாமக்கல் தாலூகா போர்டு பிரசிடெண்டு தமது (நெ. 219/ G/ 31/ N. T. B. தேதி 24-4-31) கடிதத்தில் பஞ்சாயத்து உபதேசக் கமிட்டி நிறுத்தப்பட்டதாக பஞ்சாயத்து காரியதெரிசியை அறிவித்தார். திருத்தப்பெற்ற சட்டத்தின்படி தாலூகா போர்டு எலெக்ஷன் முடிந்ததும் போர்டு அமைக்கப்பட்டவுடன் அந்த பஞ்சாயத்து உபதேசக் கமிட்டியை மீண்டும் ஸ்தாபிப்பதற்கு பிரயத்தனம் செய்யப்படும்.

பலவகை வேலைகள்:—பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜனரல் Mr. டி. ஜி. ரதர் போர்டு இக்கமிட்டியின் வேலைகளை மிகவும் ஆவலோடு கவனித்து வந்தார். அவருடைய உபதேசத்தின்படி தனது வேலையை சுயேச்சையோடு நடத்த அதை

அனுமதித்திருந்தார். இவ்விடத்தில் 1930ஞு அக்டோபர் மாதம்வரை சென்ற 7 வருஷங்களாக மழை இல்லாத கஷ்டத்தால் கிராமவாசிகளில் உத்தேசம் அரை வாசி ஜனங்கள் வேறு ஸ்தலங்களுக்குப் போய்விட்டதாலும், பஞ்சாயத்துக்களின் பணக்கஷ்டத்தாலும் ஜல சப்ளைக்காக சர்க்காரிடமிருந்து 2/3 உதவிப்பணம் அவர் வாங்கிக்கொடுத்தார். இதற்கு ஜில்லா கலெக்டர் Mr. A.H.A. டாட் I.C.S. சிபார்சு செய்திருந்தார். இவர்களின் சமயோசிதமான சகாய மன்றியில் கிணறு வேலைகளில் அநேகம் பணமில்லாததால் நடுவில் நிறுத்த நேரிடுமாயிருந்தது. பஞ்சாயத்துக்களில் குடி ஜலத்தின் கஷ்டம் மிகவும் அதிகரித்துவிடுமா யிருந்தது. குறிப்பிட்ட, சமயத்திற்குள் செலவு விவரங்களை அனுப்பாத பஞ்சாயத்துக்களுக்கு இந்த பொருளுதவி கிடைக்கவில்லை. இவ்விதம் சகாயம் செய்ததற்கு இவர்களோடு இக்கமிட்டியார் நன்றி பாராட்டுகின்றனர். பஞ்சாயத்துக்களின் முன்னேற்றத்திற்கு உதவிசெய்ததற்காக கீழ் குறிப்பிடும் பேர்களுக்கும் இக்கமிட்டி நன்றி செலுத்துகின்றது. அவர்களாவன :—மகா-ா-ா-ஸ்ரீ டிவான் பஹதூர் R ராமசந்திர ராவு அவர்கள் C.S.I., மா-ா-ா-ஸ்ரீ ஆதிநாராயண செட்டியார் அவர்கள் பார்-அட்-லா, ராஸிபுரம் தாலூகா கிராம புனருத்தாரண இன்ஸ்பெக்டர்கள், ஆஸ்பத்திரியில் சிரமமான வேலையையும் கூட்டாக்காமல், கிராமமுதல் சிகிச்சைக்காரர்களுக்கு பகலிலும் சாயந்திரமும் வியாதி, முதல் சிகிச்சை, இவ்விஷயங்களில் பிரசங்கம் செய்த நாமக்கல் மெடிக்கல் ஆபீஸர் மா-ா-ா-ஸ்ரீ R. சுப்பய்யா அவர்கள் M.B.B.S., சகல ஆணரரி ஆர்கனைசர்களும், ஸ்ரீமான்கள் T. ராமராவும், T.P. சுப்பிரமணிய கந்தரும் (இவர் தமது பணத்தையும் சமயத்தையும் சற்றும் கவனியாது கமிட்டி கூட்டங்களின் உபப்பிரசிடெண்டாகவிருந்து நடத்தினர்) பஞ்சாயத்துக்களுக்கு மிக்க உதவியளித்தார்கள். பரிசோதகர் (Check-measuring Officer) Mr. A. D. சாமுவேல் கமிட்டி கூட்டங்களுக்கு வந்தும், உதவிகோரும் பஞ்சாயத்துக்களுக்கு உபதேசம் கொடுத்தும், வேலைகள் செய்வதில் உபகாரமான குறிப்புகளைக் கொடுத்தும், பஞ்சாயத்துக்களுக்கு பேருதவி யளித்தார். இவருடைய சகாயத்தால் விசேஷ சாமர்த்தியம் வேண்டிய ஒரு கலிங்கல் (R. C. காங்கிரீட்) கட்டப்பட்டது. சக்கிரவர்த்தி பிரானின் பிறந்தநாளான ஜூன் 30-ம் தேதியில் நமது காரியதரிசியின் வேலைகளை கவனித்து அவருக்கு "ரவு சாஹிப்" என்ற பட்டத்தை யளித்ததற்கு சர்க்காரை இக்கமிட்டியார் நன்றி பாராட்டுகின்றார். சேலம் ஜில்லா போர்டு பிரசிடெண்டையும் நாமக்கல் தாலூகா போர்டு பிரசிடெண்டையும் அவர் செய்த உதவிகளுக்காக கமிட்டியார் நன்றி கூறுகின்றார்.

செல்வநிலை :—கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்ட கணக்குப் பரிசோதகரின் வருமானச்செலவு அறிக்கையை இதன் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. கமிட்டியின் செல்வ நிலையை அது வெகுத் தெளிவாகக் காட்டுகின்றது.

———

நத்ரம்பள்ளி பஞ்சாயத்தில் கட்டாய ஆரம்பக்கல்வி.

(1930-31-ம் வருஷத்திய யாதாஸ்தின் சில பாகங்கள்)

வட ஆர்க்காட்டு ஜில்லாவில் திருப்பத்தூர் தாலூகாவில் நத்ரம்பள்ளி என்ற கிராமம் இருக்கின்றது. ஜலார்பெட்டிலிருந்து 5 மைல் தூரத்துக்கப்பால் சென்னை பெங்களூர் ரோடில் நாம் அந்த கிராமத்தை காணலாம். அவ்விடத்தில் ஒரு பஞ்சாயத்திருக்கின்றது. 2½ சதுர மைலுக்குக் கூடுதல் ஸ்தலங்கள் அதன் ஆட்சிக் கதினத்திலிருக்கின்றன. 6 சிறு கிராமங்களும் அதில் அடங்கியிருக்கின்றன. அவ்விடத்து ஜனங்களெல்லோரும் விவசாயிகளோ அல்லது விவசாய வேலைபாட்களோ ஆவார்கள்.

1927-ம் வருஷம் ஜூலைமாதம் முதற்கொண்டு இவ்விடத்தில் கட்டாயக் கல்வி திட்டம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்த திட்டம் கொண்டுவருவதற்கு முன், இவ்விடத்தில் ஒரே ஒரு பள்ளிக்கூடம்தான் உண்டாயிருந்தது. இப்பொழுது மூன்று பள்ளிக்கூடங்களிருக்கின்றன. அவைகள் பிரத்தியேகமாக இருப்பதால், பள்ளிக்கூடத்திற்கு போகப் பிராயமுள்ள எல்லா பிள்ளைகட்கும் சுலபமாக போக முடிகின்றது.

1931 ம் வருஷம் மார்ச் மாதத்தில் மாணவர்களின் எண் 512. சென்ற வருஷத்தில் 421 மாணவர்களே பயிற்சி பெற்றனர். சராசரி வந்தவர்களின் எண் 337. பள்ளிக்கூடங்களுக்குப் போக பிராயம் வந்த பிள்ளைகள் எல்லோரும் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். ஆனல் 21 மாணுக்கர்கள் வெகு தினங்களாகப் பள்ளிக்கூடத்திற்கு வராததால் அவர்களின் தகப்பனர்கள் பேரில் குற்றம் சாட்டப்பட்டது. மூன்றுபேர்களைத் தவிர, மற்றவர்கள், கண்டித்த பிறகு விடப்பட்டனர். மூன்று பேர்களுக்கு ஒரு ரூபாய் வீதம் அபராதம் போடப்பட்டது. தினசரிக் கமிட்டியார் இவ்வருஷத்தில் 4 தடவை கூடினர். மாணுக்கர்கள் சரியாக பள்ளிக்கூடங்களுக்கு வருவதற்கு அவர் கூடியவரையில் சிரமப்பட்டார். ஆக 16 உபாத்தியாயர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் இரண்டு பேர் இன்ஸ்பெக்டர்களும், மூன்றுபேர் விசேஷ பயிற்சி இல்லாதவர்களுமாகும். மற்ற உபாத்தியாயர்களெல்லோரும் போதுமான கல்வி பயிர்சி பெற்றவர்களாவார்.

இப்பள்ளிக்கூடங்களில் எல்லா ஹிந்து விசேஷங்களும் கொண்டாடப்படுகின்றன. அதற்குள்ள திருவிழாக்களும் நடத்தப்படுகின்றன. தினமும் பிரார்த்தனைகள் நடத்தப்படுவதாலும் சில சமயங்களில் மதசம்பந்தமான தர்க்கங்கள் நடத்துவதாலும் மாணுக்கர்களுக்கு சன்மார்க்க உபதேசங்கள் கொடுக்கப்படுகின்றன.

தினமும் தேக அப்பியாச முறைகளும் மாணுக்கர்களுக்கு போதிக்கப்படுகின்றன. தவிரவும், பாட்மின்டன், வாலிபால், நமது இராஜ்யத்தில் பண்டைக்கால முதலே உள்ள விளையாட்டுகள் இவைகளும் அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டிருக்கின்றன.

451 பையன்களின் தேகஸ்திதிகளை டாக்டர் பரிசோதித்துப் பார்த்தார். சுகக்கேடு விவரங்கள் அநாது பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு தெரியப்படுத்தப் பட்டன. வியாதியால் வருந்தும் எல்லா பிள்ளைகளையும் டாக்டர் இலவசமாக சிகித்சை செய்தார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு டாக்டரின் யாதாஸ்து அனுப்பிக்கப்பட்டது.

இந்த எல்லைக்குள்ளிருக்கும் ஜனங்களின் எண்ணிக்கையை கவனிக்குமளவில் அதிக காலதாமதம் செய்யாமல் கூடுதல் பள்ளிக்கூடங்களை கட்டவேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால் பணக்குறைவால் மானேஜ்மெண்டு மிகவும் கஷ்டப்படுகின்றது.

கட்டாயக்கல்வியால் நேர்ந்திருக்கும் மாறுதல்களை இனிமேல் நாம் கவனிப்போம். பாமர ஜனங்களுக்குக் கல்வியின்மேலுள்ள அசிரத்தை அறவே அழிந்து விட்டது; படித்த அபிவிருத்தியால் பிள்ளைகள் வேலைக்கு வாராமல் போய்விடுவார்களோ என்றொரு மேல் ஜாதியர்களுக்கு அச்சம் இருந்தது. அதை இப்பொழுது காணமுடியாது. இதைப்போலவே கல்வியின் அபிவிருத்தியால் ஜனங்களிடையிலுள்ள நோக்கங்கள் மாறுதல் அடைகின்றதென்றும், அநேக துன்பங்கள் இது காரணத்தால் விளையுமென்ற ஒரு பயமும் நிலச்சுவான்களிடையில் இருந்தன. அவை பூண்டோடு ஒழிந்துவிட்டன. இவை எல்லாவற்றைக் காட்டிலும் விசேஷமான மாறுதல் என்னவென்றால் தீண்டாஜாதிப்பிள்ளைகளுடன் மேல்ஜாதிப் பிள்ளைகள் இருக்கக் கூடாதென்ற கொள்கை போனவிடம் தெரியவில்லை என்பதே.

அடக்கம்.

பக்கம்.

1.	கிராமப் பஞ்சாயத்து அமைத்தல்	271
2.	பத்திராதிபரின் குறிப்புகள்	275
3.	விவசாயக் குறிப்புகள்	278
4.	6½-வட்டிக்குக் கவர்ன்மெண்டு கடன் வாங்குதல் அவசியமா? ...	287
5.	பண நெருக்கடியும், கிராமக் கூட்டுறவுச் சங்கங்களும் ...	291
6.	மத்திய பாங்கிக் கமிட்டியாரின் சிபார்சுகள்	293

சந்தா விவரம்.

பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு	ரூபாய்	2.
மற்றவர்களுக்கு ...	,,	3.
தனிப்பிரதி ...	அணா	4.

விளம்பர விகிதம்.

சஞ்சிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்,

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை.

பொது விளம்பரம்.

தாலூக்கா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள் பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிரூபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சயிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிரூபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிரூபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.